உ
சிவமயம்

# சுவாமி பிள்ளைத்தமிழ்

பண்டித வித்துவான் க. சி. நடராஜன் B. O. L., Dip. Ed.
அவர்கள் இயற்றியது.

—

வெளியீடு :
யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக்கழகம்
$\frac{411}{1}$, காங்கேசன்துறைவீதி; யாழ்ப்பாணம்.

R. Shanmugam.

உ

சிவமயம்

# சுவாமி பிள்ளைத்தமிழ்

பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip. Ed.
அவர்கள் இயற்றியது.

---

வெளியீடு :
யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக்கழகம்
$\frac{411}{1}$, காங்கேசன்றுறைவீதி; யாழ்ப்பாணம்.

முதற்பதிப்பு: 1969

உரிமை ஆசிரியர்க்கே

விலை ரூபா 2-50

*Published by*
THE JAFFNA CO-OPERATIVE TAMIL BOOKS PUBLICATION AND SALE SOCIETY LTD.
*(Regd No. J-1538 of 10-11-67)*
411/1, K. K. S. ROAD, JAFFNA.

அச்சுப்பதிவு : கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்.

# அணிந்துரை

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

வெண்பா

சித்தசிவ யோக சுவாமி திருவடிமேற்
பத்திக் கனிவுதமிழ்ப் பாவாகித்—தித்திக்கும்
பிள்ளைத் தமிழாய பேறுநட ராஜகவி
உள்ளத் துணர்விருந்த வாறு.

2-6-69. சி. க.

# பதிப்புரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே."

சிவயோக சுவாமிகள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கியவர்கள். அவர் சித்திகள் பல செய்து, புத்திகள் பல போதித்து, பத்தி வழியை விளக்கி, முத்திநெறி காட்டிய வித்தகச்சித்தர்.

சிவயோக சுவாமிகளின் பன்னூற்றுக்கணக்கான அடியவர்களுள் எம் இனிய அன்பர் திரு. க. கி. நடராஜன் அவர்கள் தம் இளமைக்காலந்தொட்டே சுவாமிகள்பால் பேரன்புகொண்டு அவர்தம் அருட்பார்வைக்கிலக்காக விளங்கியவர்கள். சுவாமிகளின் கருத்தின்வழியே ''சிவதொண்டனை'' 1934-ம் ஆண்டு மார்கழித்திங்கள் தொடங்கி தம் கமலாசனி அச்சகத்தில் பதிப்பித்து வந்தவர்கள்.

திரு. நடராஜன் அவர்கள் சுவாமிகள்பால் கொண்டிருந்த தம் உள்ள நெகிழ்ச்சியை முன்னிலைப்பரவலாகிய அதிமதுரச் செந்தமிழ்ச் செய்யுள்களால் வெளியிட்டுச் சிலவற்றைச் சுவாமிகளின் முன்னிலையிலேயே படித்து மகிழ்ந்தார்கள். தொடர்ந்து, உள்ளத்தின் ஆராமையை உள்ளபடி எடுத்தியம்ப வல்லது பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமேயாதலின், சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு ''சுவாமி பிள்ளைத்தமிழை'' இனிது நிறைவேற்றினார்கள். இச் ''சுவாமி பிள்ளைத்தமிழி''ன் சில பாடல்களை ''சிவதொண்டன்'' இதழ்களில் படித்து இன்புற்ற யாம், முழுநூலையும் கேட்க விரும்பியிருந்தோம்.

அணிமையில் ஒருநாள் முழுநூலையும் படிக்கக்கேட்டு மிக மகிழ்ச்சியடைந்தோம். அதனை அச்சிட்டு வெளிப்படுத்தின் சுவாமிகளின் பன்னூற்றுக்கணக்கான அடியார்கள்

அதனைத் தம் ஆராதனை வேளைகளில் படித்து இன்புறுவர் என எண்ணி, எம் கருத்தைத் தெரிவிக்க, நூலாசிரியரும் இசைந்தார்கள். மேலும், இஃது இலக்கியச்சுவை நவில்வார்க்கு நல்விருந்தாகும் எனவும் எண்ணினோம்.

இந்நூல் வெளிவருவதை அறிந்த அன்பர் பலர் வாழ்த்து வழங்கி ஊக்கப்படுத்தினார்கள். இங்ஙனம் வெளிவரும் ''சுவாமி பிள்ளைத்தமிழ்'' என்ற நூலை எமது கழகத்தின் மூன்றாவது வெளியீடாக அன்பர்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றோம்.

இந்நூல் இங்ஙனம் சிறப்புடன் வெளிவரப் பல்லாற்றானுதவிய ''செல்லம்ஸ்'' படப்பிடிப்பு நிறுவனத்தார், கூட்டுறவு அச்சக அதிபர், எழுதுவினைஞர், தொழிலாளர் முதலியவர்க்கும், அணிந்துரை வழங்கிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், வாழ்த்துரை அளித்த ஓளவை திரு. சு. துரைசுவாமிப்பிள்ளை அவர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

சொற்சுவை, பொருட்சுவை, பத்திச்சுவை ஆகிய பல நலன்களும் நிறைந்த இச்சிறந்த நூலை வெளியிடும் வாய்ப்பை எமக்களித்த பேரன்பர் பண்டித வித்துவான் திரு. க. கி. நடராஜன் B. O. L., Dip-in-Ed. அவர்களுக்கு எம் நன்றிக் கடப்பாட்டைக் கூறிக்கொள்கின்றோம்.

சி. சிவகுருநாதன்,
தலைவர்,
யாழ். கூட்டுறவுத் தமிழ்நாற் பதிப்பு விற்பனைக்கழகம்.

411/1 காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்,
5-6-69.

வ

# முன்னுரை

எங்கள் சுவாமிகளின் திருவருட் குறிப்பின்வழி நின்று 1963 ஆம் ஆண்டில் பாடத்தொடங்கிய இப்பிள்ளைத்தமிழ், திங்கள் தோறும் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற்று வரும் யாக நாட்கள் என்றழைக்கப்படும் தியான நாட்களிற் பருவம் பருவமாகப் பாடி முடிக்கப் பெற்றது. இது பாடிச் சில ஆண்டுகள் கழிந்தபோதிலும், இதுகாறும் இதனை அச்சிடுதற்குரிய வாய்ப்பு உண்டாகவில்லை. அஃது என்றுவது ஒரு நாள் திருவருளால் வரும் வாய்ப்புக்கிடைக்கும்போது அச்சுவாகனம் ஏறுக என்று யான் எண்ணியிருந்தமையும், உடனே அச்சிடுவிக்கவேண்டும் என்பதில் பேருக்கங் கொள்ளாமையும் இதுகாறும் இந்நூல் வெளிவராமைக்குக் காரணங்களாகும். எனினும், சுவாமிகளை வழிபடுங்காலங்களில் இடையிடையே இதனைப் படித்துவரலாயினேன். சிவதொண்டன் வெள்ளிவிழாமலரிலும் ஆண்டுமலர்களிலும் சிற்சில பாக்களை வெளியிடலானேன். நிற்க.

சின்னாட்களுக்குமுன், என் உழுவலன்பரும் கெழுதகை நண்பரும், அராலி இந்துக்கல்லூரி அதிபரும், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகத்தின் தலைவருமாகிய திரு. சி. சிவகுருநாதர் M. A., Dip-in-Ed. அவர்கள் எம்மிடம் வந்தபோது யான் படித்துக்காட்டிய இப்பிள்ளைத்தமிழைத் தாமும் படித்துப் பார்த்தார்கள். அதில் ஈடுபட்டார்கள். "இதனை எம் கழகத்தார் வெளியிடுதற்குத் தருவீர்களா?" என்று கேட்டார்கள். இதுதான் திருவருட் சம்மதம்போலும் என்று கருதி "ஆம் தருகிறேன்" என்று கூறிக் கொடுத்தேன். ஆயின் அதை அழகுற அச்சிடவேண்டும் என்ற விருப்பத்தையுந் தெரிவித்துக் கொண்டேன். அவர்கள் அழகாகவே அச்சிடுவித்துள்ளார்கள். நூன்முகப்பில் சுவாமிகளின் திருவுருவப்படம் இயற்கை

யழகமைய, தெய்வத் திருப்பொலிய அவர்களாற் செய்விக்கப்பெற்றிருப்பதைப் பார்த்து யான் அக மிக மகிழ்ந்தேன். அவர்கள் காட்டிய ஆர்வத்தையும் ஆற்றிய பணியையும் யான் பாராட்டாமலிருக்க முடியாது. அவர்கள் ஓர் இனிய பதிப்புரையையும் எழுதியுள்ளார்கள். அவர்களுக்கு என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே'' என்பது ஆன்றோர் வாக்கு. எனினும், பலரிடம் சிறப்புப்பாயிரம்பெறுவதை யான் விரும்பவில்லை. இருவரிடம் மட்டுமே அணிந்துரையும் ஆசியுரையும் பெற விரும்பினேன். அவர்களுள் ஒருவர் என் ஆசிரியர் மகாவித்துவான் மறைத்திரு. சி. கணேசையா அவர்களின் இடத்தை நிரப்பக்கூடியவரும், பரம்பரைத் தமிழ்ப் புலவர் மரபிலே வந்தவரும், நாவலர் பெருமானுடைய மரபும், புகழும், பணியும் என்றும் நின்று நிலவ அயராதுழைத்து வருபவரும், முன்னைநாள் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பேராசிரியருமாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை யவர்களாவர். அவர்களிடம் ஒரு சாற்று கவி கேட்டேன். அவர்கள் மனமுவந்து அணிந்துரையாக ஓர் இனிய வெண்பாவை யாத்துத் தந்தார்கள். அவர்களுக்கு என் மனங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் ஒரு பெரியாரிடமிருந்து ஒரு வாழ்த்துரை பெற்றால் நல்லது எனக் கருதினேன். அது கிடைக்கலாயிற்று. அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் நடாத்தும் சேக்கிழார் விழாவில், இவ்வாண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துதற்காக ஈழநாட்டுக்கு வந்திருந்த பெரியார் 'ஔவை' யவர்கள் யான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் (B.O.L. வகுப்பில்) படிக்கும்போது அங்கு விரிவுரையாளராகக் கடனாற்றியவராதலின், அவர்கள் ஓய்வாக இருந்த நேரத்தில் அவர்களிடம் இப்பிள்ளைத் தமிழைக் காட்டினேன். அவர்களும் படித்து மகிழ்ந்து

ஓர் இனிய வாழ்த்துரை வழங்கினர்கள். பெரியார் சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை சு. துரைசுவாமிப்பிள்ளை யவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சக அதிபர், அங்குள்ள ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் என் அன்பும் நன்றியும் உரியவாகுக.

இந்நூலை – இதிலுள்ள பாக்களை – எங்கள் சுவாமிகளின் திருவடிகட்குச் சாத்தும் பூக்களாக – காணிக்கையாக வைத்து வணங்குகின்றேன்.

செந்தமிழ்ப் பெருமக்களும், சிவநெறிச் செல்வர்களும், சுவாமிகளின் அன்பர்களும் இதனை உவந்தேற்றுக் கொள்வார்களென்பதில் எனக்கையமில்லை. குற்றங்களைந்து குணமெடுத்துக் கொள்ளுதலன்றோ கற்றறிந்த மாந்தர் கடன்.

வணக்கம்.

''யோகபவனம்''
பொன்னப்பாவீதி,
வண்ணார்பண்ணை
6-6-69.

அன்பன் க. கி. நடராஜன்

# வாழ்த்துரை.

சித்தாந்த கலாநிதி
உரைவேந்தர் பேராசிரியர்
**ஔவை சு. துரைசுவாமிப்பிள்ளை அவர்கள்**

ஈழநாட்டுப் புலவர்மணி என் நண்பர் பண்டிதவித்துவான் க. கி. நடராஜன் B. O. L. அவர்கள் ஸ்ரீயோகசுவாமியவர்கள் மீது பாடிய "சுவாமிபிள்ளைத் தமிழைப்" படித்து இன்புற்றேன். இந்நாளில் தோன்றிய தெனினும், பழம் புலவர்கள் மேற்கொண்டு எழுதிய நடையிலேயே இந்த நூல் அமைந்திருப்பது மிக்க இன்பந் தருவது. பிள்ளைத்தமிழுக்குப் பெருமை தருவது அம்புலிப்பருவம் என்பது. ஆனால் அது சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு அடிப்படையில் அமைந்துவரல் வேண்டுமென்ற கட்டுப்பாட்டில் அமைந்திருப்பதால், பிள்ளைத் தமிழ் ஒவ்வொன்றும் ஒரே வகையாக இயன்று புல்மைக்கற்பனைக்குத் தனியுரிமை யளித்துச் சிறப்பிக்கும் நலத்தை ஓரளவில் குன்றத்து விடுவதுண்டு. கட்டுப்பாடின்றிக் கற்பனை வெள்ளத்தில் மிதந்து செல்வன ஏனைப்பருவங்கள். அவற்றுள்ளும் சிற்றிற் பருவம் தனியழகு வாய்ந்தது. அதன் சால்பினைச் சுவாமி பிள்ளைத்தமிழிற் காணப்படும் சிற்றிற் பருவம் மிக்க நயமாக வெளிப்படுத்தி இன்பந்தருகிறது. யோகசுவாமியாகிய குழந்தை ஒன்றரை வயது நிரம்பிய அளவில் மகளிர் இழைத்த சிற்றிலைச் சிதைக்கவரும் வரவு கண்டு அதற்குக் காரணம் யாதாகலாம் என நினைத்து இளஞ்சிறுமிகள் திருவீதியின் ஒருசார் "சிற்றில் பண்ணுஞ் செயலில் அறிவு செலும் பராக்கால் நினது வரவுணராது அடியேம் இருக்கை

எழாதிருந்தேம். அதனால் நீ வெகுண்டு எங்கள் சிற்றிலைச் சிதைக்க வந்தாய்'' என்று வணங்கிய மொழியால் இணங்க வுரைப்பது மிக்க நயமாக உளது. இது போலப் பருவந் தோறும் சுவாமியாகிய குழந்தையின் அருட்செயலைத் தெள்ளிய ஒள்ளிய செஞ்சொற்களால் ஆசிரியர் பிள்ளைத் தமிழுக்கு அழகும் இனிமையும் அமையப் பாடியிருப்பது படிக்குந்தோறும் மகிழ்ச்சி தருகின்றது. யாழ்ப்பாணத்துக் கொழும்புத்துறை யோகசுவாமிகளை ஞானசிரியராகக் கொண்டு நாளும் வழிபடுகின்ற நமது நடராசனார் இப் பிள்ளைத்தமிழ் நூலைச் சுவாமிகளின் திருவடிகட்குக் காணிக் கையாக வைத்துக் களிப்புறுகின்றார். சுவாமிகளின் திருவரு ளால் இப்பிள்ளைத்தமிழ் இம்மாநிலத்தில் பல்லாண்டு படிப் போருள்ளத்தில் மருவி வாழ்க என வாழ்த்துகின்றேன்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சுவாமி பிள்ளைத்தமிழ்

## விநாயகக் கடவுள் துதி

(ஆசிரிய விருத்தம்)

பொன்பூத்த சடையோடு பொலம்பூத்த திருமேனி
பொலிவோன் முன்னாட்
பொருவரிய போர்க்களிறு வடிவுகொடு
மலைமகட் பொற்பிடியை அற்புமிகவே
மின்பூத்த இடையாளை வியனுலகு படைத்தாளை
விரும்பிமிக் வுட்கலந்தே
மெய்யன்பர் வழிபட்டிங் குய்வதற்
கெனவளித்த விநாயகனை அஞ்சலிப்பாம்
தென்பூத்த பாட்டளி துதைந்ததண் டலைசூழும்
சீரீழ மண்டலத்தின்
திவ்யநுத லெனவொளிரும் மைம்முகில்கள்
தவழவரு செல்வமலி யாழ்நகரிலே
கொன்பூத்த தவவனம் போலவொளிர்
நெய்தனிலங் குலவிமகிழ் நல்வளஞ்சேர்
கொழும்புத் துறைக்கிறையைப் பரவுமென்
கொழிதமிழ் குவலயத் தினிதோங்கவே.

# 1 * காப்புப் பருவம்

## வண்ணை வேங்கடேசப்பெருமாள்

அணிகொண்ட தொண்டர்கள் அன்பினுட
னெஞ்ஞான்றும் அவனிமிசை நின்றுதுதிசெய்
அப்பனை ஒப்பிலா அரியசிவ மெய்ஞ்ஞானியை
அகமதனி லிடையறுது
மணிகொண்ட நீணிறக் கண்டத்து மாமணியை
மாண்புட னிருத்திவைத்த
மங்கள ரூபசிவ யோககுரு நாதனை
மாமூர்த்தி யைக்காக்கவே
துணிகொண்ட வெண்பிறை சூடியை
முன்னமொரு தூயநன் மலர்தூவியே
தொழுதுநற் றிகிரியைக் கைக்கொண்ட
செம்மலைத் தொல்லமரர் வாழ்வினுக்காப்
பணிகொண்ட வாசுகியை வடமாக மந்தரம்
மத்தாக வுங்கொண்டுமுன்
பாற்கடல் கடைந்தமுது பரிமாறி
யறிதுயில்கொள் பச்சைப்பசுங் கொண்டலே! 1

---

*அஃதாவது பாட்டுடைத் தலைவனாகிய குழவியைத் தேவர் காக்க எனத் தாயர் கூறும்கூற்றாகப் பாடும் பகுதியது என்க. இது மூன்றாந் திங்களிற் கூறப்படுவது; இரண்டாம் மாசம் என்பாரும் உளர்; காத்தற் கடவுளாகிய திருமாலே முதலிற் றுதிக்கப்படுவது பிள்ளைத்தமிழ் இலக்கணமரபு.

## வண்ணை வைத்தியநாதர்

(சந்த விருத்தம்)

புரங்கள் முனமொரு பொடிபட வடவரை
பொருவில் சமரிடைத் தனுவெனக் கோட்டினர்
பொங்கி வருமொரு கங்கையைத் திருமுடி
பொலிய நிறைதரு தடமென நாட்டினர்
பூவை நிகருமின் மொழியுடைக் கயல்விழிப்
புனித வருள்வடி வன்னையைக் கூட்டினர்
புயங்கள் நாலிரு திசையினும் பரவிடப்
பொலிந்த கவிஞெடு மொள்ளிர்தர நீட்டினர்
மரங்கள் செறிதரு தண்டலை நிறைதரு
வளங்கள் மிகுமுயர் வண்ணையை வேட்டனர்
வறிய னெனதுபுன் மொழியும் வடிதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனக் கேட்டனர்
மருவு மடியவர் துயர்கள் களையுமொர்
வடிவு பெறுபவர் வெள்வளைத் தோட்டினர்
மதுர மொழுகிய தமிழி னியல்பயில்
வண்ணை வயித்திய நாதனைப் போற்றுதும்
ஒருபு றத்தினிய வமுதை நிகருமொழி
ஒருபு றத்தெரியை நிகருமொழி பேசுவோன்
உருகு பரிவினுட னன்னையை நிகருமுயர்
கருணை வடிவுகொ ளுன்னத தேசிகன்
ஒளிரு நரைமுடியும் அரையில் வெளையுடையும்
மனசில் நிறையருளு முள்ளவொர் மாசிலான்
உணரு மடியவர்க ளுணர்வு தொறுமிருந்
துய்ய அவருளத் துறையுமொரு தேசுளான்

திரண்ம ருப்பினொடு கறுவு களிறனைய
சிறிய புலனைவெலும் வகையினைச் சொல்லுவோன்
செழும றைப்பொருளை யெளிய சொற்கள்கொண்
டினிதி னறிவுறுத் தெவரையும் வெல்லுவோன்
திருவ டித்துணையென் முடிப தித்தவடு
தீரஈத மெய்ப்புக ழாண்டவன் தெய்விகத்
திருவ ளருமிசை மருவு கொழும்பகத்
துறையு மெமதருட் குரவனைக் காக்கவே. 2

### தையல்நாயகியம்மை

(வேறு)

பெருகு மன்பினொடு வழிபடு மடியவர்
பெறுவ தற்குரிய வெல்லா மளித்தவள்
அறிவ தற்கரிய கரிமு கத்தவனை
முருக அற்புதனைப் பெற்றுக் களித்தவள்
அரிய யற்கரிய பெரிய செம்பொருளின்
அளியெ னுங்கடலி னுற்றுக் குளித்தவள்
பெரிய கம்பைநதிக் கரையில் முன்னொருகால்
இறையை யன்பொழுகத் தழுவிக் குழைத்தவள்
கருணை யென்னுமொரு பெயரு முற்றழகு
கவின அண்டமவை முற்றுந் தழைத்தவள்
கதியில் மன்னுயிர்கள் கதியை யெய்துதற்குக்
கவுரி யென்னும்வடி வுற்றுத் திளைத்தவள்
கனத்த கல்வியொடு தனத்தைப் பத்தியுறு
மனத்தை மெய்ப்பொருளை யீந்து களித்தவள்
கடையெ னுள்ளமெனும் மலரி னெந்தையொடு
கவின வீற்றிருக்கு மன்னையைப் போற்றுதும்

கருவ டைந்தபயன் பெறுவ தற்குரிய
கதியைக் காதலர்க் கருளியே காத்தவன்
கருவ நெஞ்சினரைக் கருவம் போக்கியுயர்
அரிய ஞானமுறக் கருணையைப் பூத்தவன்
பெரிய கள்வரையும் உரிய நண்பினுடன்
பெரிது மோம்புமொரு பெட்பினில் மூத்தவன்
சருவ ஞானங்களும் ஒருமித் தெய்துதற்குப்
பெருநற் சிந்தனையைக் கருதியே யாத்தவன்
பரவு மங்கையரும் உருகும் ஆடவரும்
பணிசெ யுள்ளமொடு பரவித் துதிக்கவும்
சிறிது மன்பதிலாக் கொடிய நெஞ்சினர்போற்
சினத்து வன்மொழியை யுரைத்துக் கதித்தவன்
பரிதி போலவினைப் பனியை யோட்டியெம
திருளைப் போக்கியருங் கூற்றைக் குதித்தவன்
பரவை சூழ்கொழும்புத் துறையி லெய்தியருள்
பழுத்துக் கருணைபொழி குழவியைக்காக்கவே. 3

## சிந்தாமணி விநாயகர்

கைத்தல மோடிரு [1]கரடக் கரைத்திரை
கக்கு[2] கடாமுடை கடலினில் மூழ்கியென்
சித்தம தாமொரு துறியிற் றொடக்குறு
சிந்தா மணியா னடியிணை போற்றுதும்.

---

கைத்தலமும் இரண்டு கரடங்களுமாகிய கரையின் கண், திரையைக் கக்கும் கடாமாகிய உடைகடலில் மூழ்கி என்க.

1. கரடம்–மதம் பாயும் சுவடு; இவை செவியடிகள்.
2. கடாம்–மதம்.

பத்தர்க ளுளமதில் நித்தமு முறையுமோர்
புத்தமு தாமென வருளைப் பொழிதரு
கொத்தலர் காவுயர் கொழும்புத் துறையுறை
கொண்டலை யெஞ்சிவ யோகியைக் காக்கவே. 4

## நல்லூர் முருகன்

(வேறு)

அமரை .விளைத்துச் சுரேந்திர னுதிய
அமரர் சிறையுற் றநாதர்க ளாமென
அழுத வழுகை பொருதுயர் தாயென
அளிகொ டயிலை யராவென வேவிய
குமர முருக குகபர மேசனின்
குரவ னெருவ னெனேயருள் கொண்டிவண்
குழவி யெனவே நலூரினில் உற்றவக்
குறவர் மகளின் கொழுநனைப் போற்றுதும்
எமரே பிறரே எனுதெவர் மீதுமே
இனிய வருள்பொழி முகிலது வாமெனப்
பொழியுங் கருணைப் புயாசல வீரனைப்
புவியி லெவரு மியோகரென் றேயழை
[1]திமிர மகற்றுஞ் சீர்ப்[2]பானு வைநிகர்
திருவார் முனிவன் செல்லப்பன் சீடனைச்
சிவனை நினையுஞ் சிரோமணி சீர்மணி
சிவனுங் கொழும்புத் துறையனைக் காக்கவே. 5

1. திமிரம்—இருளை. 2. பானு—சூரியன்

## நான்முகக் கடவுள்

(வேறு)

இலந்தைக் குளத்துக் கண்மையினில்
இனிய கமுகு செம்பழுக்காய்
எழிலார் பவள முதிர்க்கஅயல்
இலங்கு பாளை முத்துகுக்க
விலங்கு ஞிமிறு யாழ்நாட்டின்
விரிந்த புகழைப் பாடவளர்
வியனூர் சோலை விரிகொழும்புத்
துறையின் முனிவ னைக்காக்க
கலன்கள் மிளிர முன்னாளிற்
கருங்கட் செவ்வா யாய்ச்சியர்கள்
கறந்து வைத்த வுறிப்பாலைக்
கருதித் திருடிக் கட்டுண்டங்
கலைந்து திரியா வண்ணமிருந்
தரியாந் தந்தை யுண்டுறங்க
அரும்பாற் கடலைப் படைத்திந்த
வகிலம் படைத்த நான்முகனே. 9

## இந்திரன்

(வேறு)

கருதுமவை தந்தினிது மகிழ்விக்கும் தருவெனுங்
கற்பகக் காவி னுக்கும்
காமதே னுப்பெயர்கொள் கவினினிய
கோவினுக்கும் கடவுண்மணி சிந்தா மணிக்கும்
பெருகுமத வாரண மெனும்வெள்ளை யானைக்கும்
பேணுகுண திசைத னக்கும்

பெருமையுறு காவலன்பெண்தெய்வ யானையைப்
பெற்ற*குலி சனைத்து திப்பாம்
தருமினிய கற்பகஞ் சிந்தா மணிக்கல்லு
சார்வரிய காம தேனு
சந்ததம் இவையெலாஞ் சதமல்ல வென்றுலகில்
தாணுவே சதமெ னக்கொண்
டரியசிவ யோகத்தி லமர்ந்தினிதி னெம்மனோருக்
கருணெறி காட்டி யருள
அருவளஞ் சேர்கொழும் புத்துறை யூரில்வரும்
அண்ணலைக் காக்க வென்றே. 7

## திருமகள்

ஆதிசே டப்பாய லறிதுயில்கொள் மாயவன்
ஆகமதி லணிது ழாயாம்
அடர்காட்டி னிருளோட்டு மணிவிளக்
காயமைந்தும் அங்கமல வீட்டி னையே
சோதிசேர் ஞாயிறு போலவே யிதழினைத்
திறந்தினிது வைத்த ளித்தும்
சொல்லரிய வுதவிபுரி கவுத்துவத் தோடுதித்த
சுந்தரியை யஞ்ச லிப்பாம்
பாதிராத் திரிவேளை பள்ளிகொள் செல்லப்பப்
பண்ணவன் தந்த மைந்தன்
பானுவினும் மேலான ஞானவொளி கால்கின்ற
பரிதியே யனைய செல்வன்

---

*குலிசன்-குலிசாயுதத்தையுடையவன்; இந்திரன்.

சேதித்தெ மஞ்ஞான விருளினைக் கடிவதொடு
சிந்தைமல ரிதழ்வி ரிப்போன்
செப்பரிய நற்றவஞ் செய்கொழும் புத்துறைச்
செல்வனைக் காக்க வென்றே. 8

## கலைமகள்

அன்பினைந் திணைவிரவு களவெனப் படுவதென்
றணிபெற வெடுத்த நூற்பா
அமைதரு மிறையனார் களவியற் களியமுதம்
அங்கமல வீட்டி ருந்தே
இன்பினிற் சுவைகொள்ளு மினியவெள் ளோதிமம்
என்னெஞ்சிற் குடிபு குந்த
எழிலாரு முரைமகள் கலைமகள் நாமகள்
எஞ்செல்வி யைத்து திப்பாம்
என்புருக *வத்துவிதப் பொருளுடன் அடியவர்கள்
என்றென்றுங் காப்ப தாமென்
றிணையிலா முறையினி லினியநற் செய்யுள்செய்
எங்குரவன் யோக நாதன்
வன்புரைகள் பலபேசி யடியவர்கள் வினைதீர்க்கும்
மாதவன் திரைசு மந்து
வளைகளைக் கரைசேர்க்கும் வளர்கொழும்
புத்துறையெம்
வள்ளலைக் காக்க வென்றே. 9

*நற்சிந்தனையில் வரும் ''அத்துவிதப்பொருள் காப்பாம்'' எனத் தொடங்கும் பாடல்.

## ஏழு மாதர்கள்

(சந்த விருத்தம்)

முதுமறை தெரியபி ராமிப் பெயரினள்[1]
முனமுயர் புரமெரி மாகேஸ் வரியினள்[2]
முரல்கடல் தூர்த்தவள் நாரா யணியினள்[3]
முரணுமொர் மலைபக வேலைப் பணித்தவள்[4]
இதுவினி தெனவெழு பாரைப் பெயர்த்தவள்[5]
இனியகற் பகதருப் பூவைப் புனைந்தவள்[6]
இடியுக வடலரி யேற்றை யுகந்தவள்[7]
எனுமிவர் எழுவர்கள் தாளைப் பழிச்சுதும்
கதுமென வெனதிடர்க் காட்டை யெரிப்பவன்
கடுமல விருளினைக் கண்டு சிரிப்பவன்
கருதுமெய் யடியரில் அன்பு தரிப்பவன்
கருணையென் றொருபொருள் நன்கு தெரிப்பவன்
பொதுவினில் நடநவில் கூத்துமன் மலரடி
புனைதரு முடியினன் வெள்ளை முடியினன்
புனல்மிகு மிலங்கையை ஊரா வுடையவன்
புகலரும் புகழ்சிவ யோகற் புரக்கவே. 10

---

1. அபிராமி, 2. மாகேஸ்வரி, 3. நாராயணி, 4. கௌமாரி, 5. வாசுகி, 6. இந்திராணி, 7. காளி என்னும் சத்த மாதர்கள்.

## முப்பத்துமுக்கோடி தேவர்கள்

(வேறு)

முடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதிப்பவர்கள்
முன்னின் றுயர்ந்தேறி மோகமது நீங்கவும்
முழுதுல கடியவர் பழுதிலன் பொடுதனி
முற்றுங் கடைத்தேறி மோட்சநிலை யெய்தவும்
படித்தலப் பயன்பல விரும்புநர் பணிசெயவும்
பாங்கினி லொழுகியெஞ் ஞான்றுமுயர் வெய்தவும்
பலபிறப் பெடுத்துழல் பலவுயிர்க ளுய்யவும்
பாவம் பழியொரீஇப் பாரிலருள் ஓங்கவும்
நடித்தலை யொருவியுய் நெறித்தலை யொழுகியுயர்
நன்மைச் சிவவழியில் நாடுயர்ந் தோங்கவும்
நறுமலர் பறித்துள நெகிழ்வுடன் தொழுதுயவும்
நாளும் அருள்புரிந் தாளுமெம் மூர்த்தியை
மடித்தலத் துறுவதொரு மதலையைத் தருபவளின்
மன்னு முளக்கசிவொ டோம்புமோர் அண்ணலை
மருத்துவர்[1] வசுக்[2]கதி [3]ருருத்திர [4]ரெனப்பொலியு
முப்பத்து முக்கோடி தேவர்கள் புரக்கவே. 11

காப்புப் பருவம் முற்றிற்று

1. அசுவினி தேவர் இருவர். 2. அட்டவசுக்கள். 3. துவாதசாதித்தர். 4. ஏகாதசருத்திரர். ஆக முப்பத்துமூவர். முப்பத்து மூன்றை எல்லையாகவுடையவர் என்பது கருத்து. கோடி-எல்லை.

## 2. *செங்கீரைப் பருவம்

வேய்கள்மலி வெற்பெங்கும் வீறிட்ட சூற்கொண்ட
மேகங்கள் பெய்தளித்த
வெள்ளம் பரந்துபல கன்னுலாஞ் சோலைகளில்
†வேரிமிகு பூக்கடைய
ஓயாதொண் சாரலினி லோடுமரு
வியைப்புதைத்தே யொளிர்நித்தி லம்வரன்றி
யுழுவை[1]மரை யிரலை[2]யொடு வழுவை[3]க்ர
டிகள்வருண்டை[4] யொழுகச் சுமந்துசென்று
தூ[5]யாறும் மூன்றுமெனுந்[6] தூயமா மணிக[7]ளள்ளித்
துய்யபே-ருததி[8]யின்வாய்த்
துரக்குமா வலிகங்கை கஞகங்கை தூயதாம்
மாணிக்க கங்கைபெருகும்
சேய்மையிசை திசைபரப்பிச் செறியீழ வளநாட!
செங்கீரை யாடியருளே
சீர்பெருகு செல்லப்ப மாமுனிவர் தருமொருவ!
செங்கீரை யாடியருளே. 1

---

*அஃதாவது ஒருகாலை முடக்கி, ஒருகாலை நீட்டி இரு கைகளை யும் நிலத்திலூன்றித் தலை நிமிர்த்தி முகமசைத்தாடும் பருவம். இளங்கீரைத்தண்டு காற்றில் அசைவதுபோன்ற செயல் என்ப. பிறவாறு கூறுவாருமுளர். இஃது ஐந்தாம் மாசத்திற் கூறப்படுவது.

† வேரி-தேன்

1. புலி 2. கருமான். 3. யானை. 4. ஆடு. 5. தூய்-தூவி; 6. ஆறும் மூன்றும்-ஒன்பது வகையான. 7. இரத்தினங்களை. 8. உததி-கடல்.

மெய்ம்மைநில வப்பெரிய நீர்மைநில வப்புவியில்
நிலையான பண்புநிலவ
நேர்மைநில வத்தெய்வ நின்மலா னந்தம்நிலவ
நீடுபே ரன்புநிலவப்
பொய்ம்மையக லப்பொய்யை மெய்யென்போர்
குழுவுமகலப் புன்மையாஞ் செயல்களகலப்
போகாத வல்வினையும் போயுடன் முற்றுமகல
புனிதமா மொளிபரப்புஞ்
சைவம்நில வப்புறச் சமயவிருள் தலைகரப்பச்
சாந்தமாம் பயிர்தழைப்பச்
சந்தமுட ஞேர்காலை முட்க்கியோர் காலைநீட்டி
தலைநிமிர்ந் தசைந்துநின்று
செய்யதமிழ் மொழிசைவஞ் செறியீழ வளநாட!
செங்கீரை யாடியருளே
சீர்பெருகு செல்லப்ப மாமுனிவர் தருமொருவ!
செங்கீரை யாடியருளே. 2

விரலினது சுவையுண்டு கனியுமமு தூறுநின்
மெல்லிதழ் புலராமலே
மேதினித் துயர்கண்டு விம்மியே யழுதுனது
மென்குரல் கம்மாமலே
கரையறும் பெரியதவம் பண்டுசெய் பலனதால்
கருவுயிர்த் துணைத்தந்தவள்
காதலிற் றீட்டுமை கரைந்துநுண் டுளிசிந்திக்
கண்மலர் சிவவாமலே
உருவளரு மணித்தொட்டி லுதைத்துநின்
னுலகுபுகழ் ஒண்பாதம் நோவாமலே

ஒருதாளை யுந்தியெழுந் திருகையு மூன்றியங்
கொருங்கே பதித்துநின்று
திருமுகத் தருள்பொழியச் செவ்விதி
னசைந்தசைந்து செங்கீரை யாடியருளே
சீர்பெருகு செல்லப்ப மாமுனிவர் தருமொருவ!
செங்கீரை யாடியருளே. 3

செம்பொனடி சேர்சிறிய கிண்கிணியி னேடுமணிச்
சீர்ச்சிலம் பொலித்தாடவே
திருவரையி லரைஞாணு முடைமணியுஞ்
செம்மையொளி திகழுமரை வடமாடவே
உம்பர்களு முலகவரும் உய்ந்தோமுய்ந்
தோமெனவே யுவகையொடு நின்றுடவே
உரைசெயர மகளிரொடு நிலமகளிர்
முறைமுறை யுன்பெருமை கொண்டாடவே
பைம்பொனசும் பியதொந்தி யோடுன்ற னினியசிறு
பண்டியுஞ் சரிந்தாடவே
பட்டநுத லிற்பொலியும் பொட்டுடன்
வளைவான சுட்டியும் பதிந்தாடவே
செம்பவள விதழ்மலருந் திருமேனி யும்மாடச்
செங்கீரை யாடியருளே!
சீர்பெருகு செல்லப்ப மாமுனிவர் தருமொருவ!
செங்கீரை யாடியருளே! 4

(வேறு)

பொள்ளலில் முத்தே! பொங்கொளி மணியே!
புண்ணிய மாமுதலே!
புகழுறை வாழ்வே! பொற்புறு நெறியே!
புரையில் சுவைப்பாகே!

கள்ளமில் வித்தே! தண்ணிய வமுதே!
கண்ணிய மாமுனியே!
கண்டிலம் நின்னை யொப்பவர் உலகிற்
கருணைக் குருமணியே!
உள்ளிய வன்ப ருளத்தமு தூற
வினிக்கு நறுஞ்சுவையே!
ஒள்ளிய மதியே! யுணர்வழி மலநோய்
சாடும் ஒருபகையே!
தெள்ளூறு மெய்யா! செந்நெறிச் சைவா!
ஆடுக செங்கீரை
சீரருட் பாவல! யோகநற் காவல!
ஆடுக செங்கீரை. 5

பொய்யறு மன்பர் உள்ளமென் மலரில்
பொங்குந றுந்தேனே!
பொய்யனை மேவும் உண்மல மறவொர்
குருமணி யானேனே
மெய்யினர் மெய்யாய்ப் பொய்யினர் பொய்யாய்
விளங்கிடும் எங்கோவே!
மேவுமொர் யோக நன்னெறிச் சுழுனை
விரித்தவர் தந்தேவே!
ஐயனைப் போற்றும் அன்பரை யணைத்தங்
காண்டிடு மிருதோளா!
அருளடி யார்முத லனைவரு மேநசை
யுறுமிரு திருத்தாளா!
தெய்வத மெய்யா! செந்நெறிச் சைவா!
ஆடுக செங்கீரை
சீரருட் பாவல! யோகநற் காவல!
ஆடுக செங்கீரை. 6

வருமுறைப் பருவம் வளர்சிவக் களிறே
மருவருட் டுறையோனே!
வாரிநின் றெடுத்து மங்கல மங்கையர்
வழுத்துநல் லிறையோனே!
அருமறைப் பொருள்கள் தலையெடுத்
தென்றும் அவ்னியில் வென்றேற
ஐயனே! யுன்றன் அழகமர் திருமுடி
யணிபெற வெடுத்தேநற்
பெருமழுத் தாங்கும் சிவன்திரு முருகன்
பெருமையுஞ் செல்லப்பப்
பேரருட் குரவன் பெருமையு மன்றிப்
பேசிலம் பிறிதென்போய்!
திருமுக மண்டலஞ் செவ்வியோ டசைய
ஆடுக செங்கீரை
சீரருட் பாவல! யோகநற் காவல!
ஆடுக செங்கீரை. 7

(வேறு)

உரைசெ யுனதடி யவர்பவ மகலமுன்
னின்றே யாள்சோலை
யுலகில் நிறையுமெம் வலிய வினையிரு
ளோட்டும் ஓர்தீபம்
வரைவில் நெகிழ்வொடும் உருகி நினைபவர்
உள்ளத் தோர்கோலம்
மலரு முலகினிற் பிறவி கடந்திட
வைத்த வோர்தோணி

கரையில் மணலிடு கழிகள் நிறைகொழும்
புத்து றையூரில்
கரிய நிழல்தரு பனைகள் வலைஞர்கள்
காணும் ஓர்கானில்
திரையில் வளைதவழ் நகரில் வருபவ!
செங்கோ செங்கீரை
சிறியெ னிருள்கெட வொளிசெய் தினகர!
செங்கோ செங்கீரை. 8

பவமுழு தொழியமுன் பவமுறு மடியவர்
பண்டே வந்தாரே
பகர்தரு மொருமொழி யருளியங் கவரைப்
பண்பினிற் றந்தாளே
சுவைதரு மழலையின் மொழிமறை கமழும்
யோகா தூயாநின்
தொடுபரி புரவொலி செவிகலி யகலச்
சேர்த்தா யெந்தாயே
நவைதரு பிறவி யறும்வழி மொழியும்
நம்பா நம்பாவோ
நனிதளி ரடிகள் வருடிட வொருகால்
நல்காய் நல்காயே
சிவைதிரு வருளா மொருவடி வுறுவோய்!
செங்கோ செங்கீரை
சிறியெனி னுளவிருள் கெடவொளிர் மணியே!
செங்கோ செங்கீரை. 9

அருமுறை †யாதா ரத்தொடு மாதே
யப்பொரு ளானவனே!
அவனியி லுன்னை யருவெனக் கொள்ளின்
அருளே விரிவான
பெருகிய பாதந் தானெங் கேபணி
வதுதா னெங்கேயென்
றுருகிய சொல்லா லுய்வுற மொழியு
முத்தம வித்தகனே!
நிருமல ராகிய வீசனை யேத்தும்
நிர்க்குண த்யானவடி
வெனுமது தானும் யாம்நனி யுணர
விறைவன் சொருபநிலைத்
திருமிகு செய்யுட் செய்தருள் முனியே!
செங்கோ செங்கீரை
சிறியெனி னுளவிருள் கெடவொளிர் மணியே!
செங்கோ செங்கீரை. 10

செங்கீரைப்பருவம் முற்றிற்று

—

† ''ஆதார ஆதேய மிரண்டுமான அப்பனுக்குப் பாதாரவிந்த மெங்கே பாடிப் பணிவதெங்கே'' என்று சுவாமிகள் பாடிய நற்சிந்தனைப்பாடலைக் குறித்தது.

## 3. *தாலப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

கூற்றங் குதிக்கு மாற்றலுடன்
குழவி யிடத்தே நீதுறந்து
குலவி விளையா டத்தகுமூர்
குலமா மகளிர் அகிற்புகையிட்
டாற்றுங் குழற்காட் டினைப்[1]புயலென்
றூட மயில்கண் [2]டம்பவளத்
தரும்பு நகையைச் சகோரப்புள்
அருந்தி விருந்து கொண்டாடச்
சேற்றுக் குளத்துக் கரைத்தெங்கு
செல்லு மவர்க்கு [3]முதுவேனில்
செறுக்கு மிளைப்புச் செவ்விளநீர்
சிரித்துக் கொடுத்தே யன்பொழுக
மாற்றுங் கொழும்புச் செழுந்துறையின்
வாழ்வே! தாலோ தாலேலோ
மலையா ளனையாள் தரும்யோக
மணியே! தாலோ தாலேலோ. 1

---

*அஃதாவது ஐவகைத்தாயரும் மடித்தலத்தும் மணித்தவி சினும் தொட்டிலினும் அமர்த்தி நாவசைத்துப் பாடும் பகுதியைக்கூறும் பருவம்: தால் என்னும் ஓசையோடு தொட்டிலையாட்டிப்பாடும் பருவம் எனக் கூறுவாருமுளர். தால்-நா. இஃது எட்டாம் மாசத்தில் இயம்பப்படுவதாம். 7-ம் மாசத்திற் கூறுவது என்பாருமுளர்.

1. புயல்–மேகம்

2. அழகிய பவளம்போன்ற இதழில் அரும்பும் நகையை நிலவென்று கருதிச் சகோரப்பறவை அருந்தி என்க.

3. முதுவேனில் செறுக்கும் இளைப்பைத் தெங்கு செவ்விள நீரைச் சிரித்து அன்பொழுகக் கொடுத்து மாற்றும் என்று கூட்டுக.

மும்மைப் பெருந்தே வர்களுடன்
முதன்மை பெறுமெண் டிசையோரும்
மும்மைத் தமிழ்ப்பேர் வேந்தருடன்
முழுதுந் தமிழ்கற் றுணர்ந்தோருஞ்
செம்மைத் தவத்து முனிவருடன்
செறிந்த அறவோர் பெரியோருஞ்
சிவணி மனத்தி லருணினைந்து
சிறந்து வாழ்த்து மிகவெடுப்ப
இம்மைப் பெருந்தொண் டூற்றுநரும்
எழிலா ருலகே ழுறைவோரும்
இனிய வுளத்துக் களிசிறப்ப
எம்போ லியரும் ஏத்தெடுப்ப
மம்மர் தரும்வல் வினையெல்லாம்
மறைந்தே விரைவிற் போயொளிப்ப
மலையா ளனையாள் தரும்யோக
மணியே! தாலோ தாலேலோ. 2

வீக்குஞ் சிறுபைந் துகிற்றூளை
விரிக்குங் கலாபம் மருங்கலைப்ப
விளையாட் டயரும் மணற்சிற்றில்
வீட்டிற் சிறூர்கள் மகிழ்தூங்கி
ஆக்கள் பசும்புல் மேய்ந்தசைஇ
யாங்கே தருக்கள் தொறுமொதுங்கும்
அலையார் கொழும்புத் துறைக்கரையில்
அடுப்பில் மணிச்செந் தீமடுத்து

வாக்கும் [1]பணிலக் குழிசியினில்
வடித்த நறுந்தே னுலேயிட்டு
வளமார் வெளிய [2]நித்திலத்தின்
வல்சி புகட்டி வடித்தெடுத்து
மாக்கள் முதலா மக்களுக்கும்
வகையார் விருந்து புறந்தரவே
மலேயா ளனேயாள் தரும்யோக
மணியே! தாலோ தாலேலோ. 3

பண்டைப் பெருமை யெலாமொருங்கு
படைத்துச் சிறந்த திருநல்லூர்ப்
பரமன் குமரன் செவ்வேலோன்
படிவங் கொண்ட திருக்கோயில்
அண்டை வரும்பேர்க் குரவன்செல்
லப்ப னடியைத் தேரடியில்
அணேந்தங் கவன்ற னருளேமடுத்
தனேத்துல குக்கும் வழங்குதற்கே
கொண்ட திருக்கோ லப்பெருமான்
குலவு மிலங்கைக் கொருபெருமான்
குவல யஞ்செய் தவப்பெருமான்
கொழும்புத் துறைசேர் எம்பெருமான்
மண்டு மருளே வடிவானுன்
எனவே யெவரும் வழுத்தவொரு
மலேயா ளனேயாள் தரும்யோக
மணியே! தாலோ தாலேலோ. 4

1. பணிலக் குழிசியினில்–சங்காகிய பானேயில்
2. நித்திலத்தின் வல்சி புகட்டி–முத்துக்களாகிய அரிசியைப் பெய்து

சோலைக் கிளியைப் பூவையினைத்
தேனைப் பழித்த மொழியாளாம்
தூய வருளே விழியாளாம்
தொன்மைத் தையல் நாயகியாள்
மேலைச் சிவனு ருடனமரும்
விண்ணைப் பழித்த வண்ணைநகர்
மிகவும் சிறந்து கடைத்தேற
வீதி வழியா நடந்தருளி
ஆலைக் கரும்பே யெனவினிக்கும்
அமுத மொழிகள் மொழிந்தருளி
அறிவை வளர்க்கச் சிவதொண்டன்
ஆல யத்தை யும்நிறீஇ
மாலு மறியா மலர்ப்பதங்கள்
வண்மை யடியார்க் கெனவருள
மலையா ளனையாள் தரும்யோக
மணியே! தாலோ தாலேலோ. 5

(வேறு)

கல்லார் எனினும் அறிவின்
சிகரக் கருத்தோர் என்றாலும்
கனிவே யொழுகும் உளத்தோ
டடியை யடைந்தே கைக்கொள்வோர்
இல்லோம் எனவே யெதையும்
எடுத்தங் கியம்பா முன்னேயே
எழிலார் கருணை யளித்தே
யெவர்க்கும் எதையும் ஈவோனே!

மல்லார் புயத்தாய்! வளரும்
புகழாய்! வள்ளால்! செல்லப்பர்
மகிழ்ந்தே யளித்த கொழுந்தே!
ஞானக் குரிசில்! தாலேலோ
நல்லார் எவருந் தொழூஉம்
மாவை நகராய்! தாலேலோ
நன்மைத் தவமே வடிவாம்
யோக நம்பீ! தாலேலோ. 6

மண்டும் புலனுங் கரிகளை
யடுகோ ளரியே! தாலேலோ
மறவா ருளமாம் நறுமா
மலர்மீ துறைவோய்! தாலேலோ
பண்டைத் தமிழ்தேர் புலவர்
பரவும் நலனே! தாலேலோ
பகரும் அமரர் திருவும்
பழித்த குரவோய்! தாலேலோ
கண்டிங் கெவரும் கருத்திற்
பதிக்குங் கவினோய்! தாலேலோ
கருணைக் கடலே! அறிவுக்
கனலே! கண்ணே! தாலேலோ
விண்டிங் கெவரும் வியக்கும்
மாவை நகராய்! தாலேலோ
விந்தைத் தவத்தால் வந்தருள்
யோக விகிர்தா! தாலேலோ. 7

விண்டோய் முகில்கள் தழையத்
தழையும் மிகுதீம் பலாவினது
வேரிற் பழுத்துப் பாரிற்
கிடந்த வியனுர் முட்கனிகள்
கண்டே சிறுகண் முசுக்கள்[1]
கருதிக் குறிவழி சென்றெய்திக்
கனகச்[2] சுளைகள் கீண்டங்
கெடுக்கத் தோண்டுங் காட்சியது
பண்டே யொருவர் பதியக்
கனகக் கடத்திற்[3] புதைத்துள்ள
பழமா நிதியின் குழாமே
கவரும் பதிதர்[4] கூட்டமெனத்
தண்டேன் சோலைத் தருநிறை
மாவைக் கோவே! தாலேலோ
தனியாந் தவத்தில் வந்தருள்
யோக தநயா! தாலேலோ. 8

நகுலப் பெயர்கொள் முனிவன்
நயந்து நன்கு தவஞ்செய்து
நலனுர் முகமுந் திருவும்
இறைவன் நல்கப் பெற்றதொரு
நகுல மலையின் அருகே
பரியின்[5] முகமார் நங்கைமுனுள்
நாடித் தவஞ்செய் சோலை
நளினப் பொய்கை பலவற்றுள்

1. முசுக்கள்—குரங்குகள்; 2. கனகம்—பொன்; 3. கடத்தில்—குடத்தில்; 4. பதிதர்—கீழ்மக்கள்; 5. பரியின்—குதிரையின்.

செகிரிற் றிகழுஞ் சினமா
வாளை கடலிற் படிந்துண்ட
சீரார் கமஞ்சூல் முகிலின்
படலம் சிதைத்தங் குடைத்துவரும்
தகவிற் சிறந்த மாவைப்பதியின்
தருவே! யுருவே! தாலேலோ
தவத்திற் சிறந்த தவமருள்
சரணு! தாலோ தாலேலோ. 9

கருணைத் திருவுரு வத்தொடு
வந்தெமை யாள்வோய்! தாலேலோ
கவினுற் றெழுமொரு கற்பக
நற்றிரு வானேய்! தாலேலோ
அருணக் [1]கதிரவ னென்றிட
நின்றருள் ஞான [2]பானுவே
அரிதிற் பெறவரு மற்புத
மெய்ப்பொருள் [3]வாரி! தாலேலோ
[4]தருணக் களிறென வுற்றவொர்
நற்றவச் சீலா! தாலேலோ
தமியற் கருளவே வந்தவொர்
சிந்தா மணியே! தாலேலோ
வருணற் குதவுபெ ருங்கட
லோவுன தருளே தாலேலோ
மனிதக் குலமுய வந்தவொர்
யோக மணியே! தாலேலோ. 10

தாலப்பருவம் முற்றிற்று

---

1. அருணம்-மிக்க சிவப்பு; 2. பானு-சூரியன்:
3. வாரி-கடல்; 4. தருணம்-இளமை

# 4. *சப்பாணிப் பருவம்

[1]சாரங்க பாணியொடு [2]கரகபா ணியுங்காண
முடியாத சங்க ரற்குத்
தநயனுய்ப் பணிராச ஞதிசே டன்தலையும்
நெளியத்[3]தி சைக்கரியு மலறச்
[4]சூரங்க மாவடிப் பெயரவீ ரைந்து[5]மா
ருதமுந் துரந்து வீசச்
சுடராழி யும்பெயர வந்துபே ரமர்விளைத்த
சூரசங் கார னுறையும்
பாரங்க மெங்குமிசை பரவிடச் செய்யுமொரு
பதியதாம் நல்லூர் தரூஉம்
பகரரிய மறைவழியிற் பத்தரைக் காத்தசீர்ப்
பரமசெல் லப்ப முனியைச்
சாரெங்கள் மூர்த்தியே! தவராஜ யோகனே!
சப்பாணி கொட்டி யருளே
சைவந் தழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 1

* அஃதாவது கால்மடக்கிக் கையுடனே கைகொட்டும் பருவம். ஸ:பாணி என்பது சப்பாணி என வந்ததென் பர்: இஃது ஒன்பதாம் மாசத்திற் கூறப்படுவது.

1. சாரங்கபாணி-திருமால்; 2. கரகபாணி-பிரமன்; 3. திசைக்கரி-திக்குயானைகள்; 4. சூரங்கமா-சூரனை அங்கமாகக்கொண்டமாமரம்; 5. மாருதம்-காற்று.

சுந்தரம் பொலிதாளுந் தூயவெள் ளாடைபொலி
தோமறத் திகழும் அரையும்
சொன்னசா முத்ரிகா லக்ஷணத் தோடுபொலி
தோளிநெடு மார்பி னழகும்
எந்தநற் றிசையிலும் உள்ளவர்க ளெல்லவரும்
எழிலினைக் கண்டு மகிழ
இன்னருள் வழிந்தொழுகு பொன்னனைய
திருமுகத் தியைந்தமுத் தன்ன நகையும்
பந்தவெம் பிணியகலக் கொண்டெங்கள் பாவங்கள்
பாறப்ப ரிந்த ருளுவோய்!
பாரிற்கு லைக்கமுகும் வாழைக் குலைக்குலமும்
படிந்துசித றுண்ண மிகவே
சந்தக்கு லைத்தெங்கு கனிசொரியு மூரனே!
சப்பாணி கொட்டி யருளே
சைவந்த ழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 2

செப்பரு முலைமங்கை யுமையம்மை போலுபவர்
சொல்லரிய வுழவ மாதர்
சொரிபழச் சோலைசூழ் வயல்களிற் பணிசெய்து
தொன்மனை [1]போது போதிற்
[2]கப்பாரும் மாமரங் காள்![3]வருக் கைகாள்!கரும்
பனைகாள்! மடற்றென் னைகாள்!
காணு தெமைத்தேடி ழுலெங்கள் [4]மகவுங்கள்
கையடைக் கலமா கையால்

---

1. போகின்ற சமயத்தில்; 2. கப்பு-கொம்பர்கள்;
3. வருக்கைகாள்-பலாமரங்களே! 4. மகவு-குழந்தை.

மெய்ப்பாணி மஞ்சனமு மிடுமின்வெண் ணீறிடுமின்
விழுநிலக் காப்பும் இடுமின்
மெத்துமுத் தங்கொடுமின் வருகவென்
றெதிருமின் விரும்புமம் புலியை யழைமின்
சப்பாணி கொட்டுமின் எனுமாவை நகராளி
சப்பாணி கொட்டி யருளே
சைவந்த ழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 3

விண்ணோங்கு தண்டலைகள் மிகவோங்கி
வளமலியும் வியனகர் வண்ணை தனிலும்
மேலாக முருகவேள் வீற்றிருந் தருள்புரியு
மேன்மைசெறி நல்லை தனிலும்
கண்ணிலவு நெற்றியன் கருணைபோற் றிரைகள்மலி
கடலாடை போர்த்தி லங்குங்
கலம்பகப் பதியிலுங் கனவளஞ் சேர்மாவைக்
கவினோங்கு பழம்ப தியிலும்
உண்ணிலவு மன்புகொண் டுருகுசிவ தொண்டர்தம்
உள்ளத் தலங்கள் தமிலும்
ஓவாது வீற்றிருந் துருக்குமொழி யமுதுசொரி
யொண்குழவி விரல்சு வைத்துத்
தண்ணிலவு கமலமென் தளிர்க்கரஞ் சிவப்புறச்
சப்பாணி கொட்டி யருளே
சைவந் தழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 4

†மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயல்நெடு
மதரரிக் கெண்டை யுண்கண்
மாதரார் மீதுகொள் மையலே யறியாத
மாபெருந் துறவி யாகிக்
குழைக்கின்ற வுள்ளமொடு கோமகன் வீட்டுமன்
கொள்ளுமோர் விரத மொப்பக்
குவலயத் தினியொருவ ரிலையெனக் குழவிக்கண்
துறவுகொள் வீர முடனே
இழைக்குநற் சாந்தமும் இனியநம் பிக்கையும்
இன்னபல பண்பு மருளி
இணையற்ற பெருங்கொடை யெவருக்கு
மீந்துதவும் எங்கணு யகக்கு ரிசிலே!
தழைக்கின்ற நெஞ்சினிற் றண்ணருள் மிகப்பெருகச்
சப்பாணி கொட்டி யருளே
சைவந் தழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 5

வீரர்க்குள் வீரர்க்கும் மிகுமன்ன ராஞேர்க்கும்
விளங்குவன போன்ற புயமும்
மீதொளிர் வெண்கலைகள் மேவிக் களங்கமுய
லின்றிச் சுடர்வி டூஉம்
ஓரின்ப மதியமே லானதெய் வக்கமல
வொண்மலர் பூத்த படியே
யொற்றுமை பெறக்கொண்டு நிற்றல்போ
லத்திகழும் ஒளிவிழி சிறந்த முகமுஞ்

†மழைக்கொந்தள-மேகம் போன்ற கூந்தல்

சீர்பெருகு தாடியும் செய்யவள் உறைமார்புஞ்
செங்கமல மனைய தாளுந்
தீயனே னுளமதிற் குடிகொண்டு மீளாது
திகழன்பு தருகு ரவனே!
சாரவரு பவமாயச் சாருமொரு தனிமுனிவ!
சப்பாணி கொட்டி யருளே
சைவந் தழைக்கவொரு மெய்வந்த தேசிக!
சப்பாணி கொட்டி யருளே. 6

எண்ணியவை யெண்ணியாங் கெய்துதற் கடியருக்
கென்றுமரு ளீச னருளால்
ஈனச மயத்தொடக் கெல்லா மொழித்தனம்
என்றுகை தட்டு மதுவும்
திண்ணிய மலச்செருக் கெல்லா மொழித்தனம்
தீர்ந்ததிவ் வாதை யெனவே
செப்பிக்கை தட்டலும் வாசவன் திசைமுகன்
தேந்துழா யவன்றன் வாழ்வும்
நண்ணுதற் கெழுவிருப் புந்தவிர்த் தனமென
நாடிக்கை தட்டு மதுவும்
நவிலநம் சிவயோக நாதனென் றெவருமே
நயக்கவந் தவத ரித்தோய்!
தண்ணிய மலர்த்தளிர்க் கைகுவித் தையநீ
சப்பாணி கொட்டி யருளே
தனையறியு மறிவையறி வென்றசிவ யோகியே!
சப்பாணி கொட்டி யருளே. 7

(வேறு)

பெரிதாம் பொருளோ பொய்ப்பொரு
எப்பொருள் கொண்டக்காற்
பெட்புட னடியருக் கற்புட
னீந்தருள் பெற்றுய்மின்
உருவாய் அருவாய் அருவுரு
வாகும் ஒருபொருளே
ஒண்பொருள் மெய்ப்பொரு ளுணர்வீர்
உணர்வீர் ஆமென்றே
திருவாய் மலர்ந்தச் சிவஞர்க்
கலதிப் பார்மீதே
சேரா மலர்க்கை யொருகாற்
சேர்த்தின் ஞேசைபெறத்
திருவார் கொழும்புத் துறையாய்!
கொட்டுக சப்பாணி
சிவயோ கப்பெயர் பூண்முனி!
கொட்டுக சப்பாணி. 8

குருவாய்க் கோனுய்க் கொள்பவர்
தொழுபவர் கட்கெல்லாம்
குடிமுழு தாண்டருள் கொற்றவ!
கொழும்புத் துறையூரில்
வருநீர் மைக்கரு ணுகர!
கொட்டுக சப்பாணி
மலமா யைப்பகை யானவ!
கொட்டுக சப்பாணி

ஒருமா தர்ப்பிறை வாணுதல்
மைக்கண் மலர்க்கோதை
யுமைநா யகனை யறியாக்
கருத்து மருட்பாடு
தெருளார் கட்கருள் நீர்மைய!
கொட்டுக சப்பாணி
சிவயோ கப்பெயர் பூண்முனி!
கொட்டுக சப்பாணி. 9

அழியா மெய்ப்பொரு ளீகைய!
கொட்டுக சப்பாணி
அணியார் கொழும்புத் துறையாய்!
கொட்டுக சப்பாணி
விழியா லெவரையும் வெல்பவ!
கொட்டுக சப்பாணி
மெய்யா மறைப்பொருள் விரிப்போய்!
கொட்டுக சப்பாணி
வழியே காட்டருள் விழியே!
கொட்டுக சப்பாணி
மாதவத் தோர்பணி தாபத!
கொட்டுக சப்பாணி
செழுநீர் மைக்குண தேசிக!
கொட்டுக சப்பாணி
சிவயோ கப்பெயர் பூண்முனி!
கொட்டுக சப்பாணி. 10

சப்பாணிப் பருவம் முற்றிற்று

# 5. *முத்தப் பருவம்

அருந்து மமுதி னினியதாய்,
அன்போ டளைந்து படிறிலதாய்,
அறைந்த மொழிதத் துவமசியி
னன்றி மாறு வியல்பினதாய்ப்,
பொருந்து மறையின் பிழிரசமாய்ப்,
புக்க வடியார் பவக்கடற்குப்
புணையாய், அடியேன் வழித்துணையாய்ப்,
பொங்கு மருள்சேர் புகலிடமாய்ப்,
பரந்த புகழ்சேர் குருவடிவாய்ப்,
பாரி லெவரும் நிகர்வரிதாய்ப்,
பனிவெண் டிங்கட் சடைமுடியோன்
பண்பு பலவா விரித்தருளுந்
திருந்து கனிநேர் திருவாயாற்
செல்வா! முத்தந் தருகவே
திளைக்குங் கருணைச் சிவயோக
தேவா! முத்தந் தருகவே. 1

---

* அஃதாவது குழவியினது வாய்முத்தத்தை அவாவித் தாயர் கூற்றாகக் கூறும் பருவம். இது பதினோராவது மாசத்திற் கூறப்படுவது. பத்தாவது மாசத்தில் நிகழ்வது என்பாரும் உளர்.

நல்ல சலாபக் கடலினெழு
நளிர்முத் ததனை விரும்புகிலோம்;
நணுகுங் கொழும்புத் துறைக்கடலின்
நலமார் பணிலந் தருமுத்தும்,
வில்லாய் மதவேள் கரத்துறையும்
வேழக் கரும்பின் விளைமுத்தும்,
விரும்பேம்; விசும்பு துடைத்துயரும்
வேயின் வியனார் குளிர்முத்தும்,
சொல்லும் மலைநாட் டடவிகளிற்
றேன்றுங் களிற்றின் வளைபிறைநேர்
துகடீர் மருப்பின் விளைமுத்துந்,
தூயோய்! சிறிதும் விரும்புகிலோம்;
செல்வக் கனிநேர் திருவாயால்
திருவே முத்தந் தருகவே
திளைக்குங் கருணைச் சிவயோக
தேவா! முத்தந் தருகவே. 2

கரவா துவந்தீ கருத்துடைய
கண்ணே யனையா ரவரிடத்துங்
கனிந்து குறிப்பால் வழங்குமவர்
தம்மி னிடத்துங் கருத்துடனே
இரவா திருத்த லெழிற்கோடி
ஏலு; மெனவே திருக்குறளில்
இணையில் திருவள் ளுவப்பெயர்கொ
ளெம்மான் மொழிந்த வதுவுன்னி

இரவை மிகவும் வெறுப்பேனே
யேனு முனையொன் றிரக்கின்றேன்
இயையு மவர்தம் அகம்விழைந்த
வெல்லா மறிந்தங் குடனீவோய்!
திரள்செங் கனிநேர் திருவாயாற்
செல்வா! முத்தந் தருகவே
திளைக்குங் கருணைச் சிவயோக
தேவா! முத்தந் தருகவே. 3

மண்ணில் வளர்கற் பகதருவே!
மகிழும் ஞானப் பெருங்கடலே!
மருவுஞ் சிவமார் பெருவாழ்வே!
வளரா நின்ற தவக்குன்றே!
எண்ண வினிய எழிலேறே!
எவர்க்கு மருள்சிந் தாமணியே!
எளியே னுளத்து ளெழுஞ்சுடரே!
ஏத்து மவர்தம் பெரும்பேறே!
கண்ணுண் மணியே யனையவனே!
கவிஞர் பத்தி விளைநிலமே!
கருத்துக் கினிய சுவையமுதே!
காரே! இனிமே லொருதாயர்
நண்ணும் முலைப்பா லருந்தாத
நம்பா! முத்தந் தருகவே
நகைக்குங் கருணைச் சிவயோக
நாதா முத்தந் தருகவே. 4

சொல்லும் பொருளு மநுபவமுந்
துறுமி யொன்றாய் மருவுபெருஞ்
சுருதிப் பொருளைச் செழுந்தமிழிற்
சுவையார் நற்சிந் தனையென்னும்
மல்ல லறிவுக் களஞ்சியமா
வருமுன் னடியார் கொளமொழிந்த
வளமார் திருநாப் படைத்தவொரு
வரதா! முத்தந் தருகவே
அல்லும் பகலு மருட்குரவன்
அணிசெல் லப்பற் கரும்பணிசெய்
தருள்பெற் றுயர்ந்த வடியவர்தம்
அருமை பெருமை யெலாமெடுத்துக்
கல்லுங் கரையக் கதைசொல்வோய்!
கனிவாய் முத்தந் தருகவே
கதிக்குங் கருணைச் சிவயோகக்
களிறே! முத்தந் தருகவே. 5

கருவிற் புகுதா முக்கட்செங்
கரும்பி னினிய செந்தாள்கள்
கருத்திற் பதித்த மெய்யடியார்
கனமா விருளைச் சீத்தினிமை
விரவி யெழுசெஞ் ஞாயிறென
விரியுஞ் சிவந்த சீரடிகள்
விரும்பித் தலையிற் சூட்டுதல்போல்
விரகோய்! அடியே னுள்ளமெனும்

கருமை கடுமை சேர்ந்தொன்றுங்
கருங்கல் லதனிற் பூப்பித்த
கடவுட் டிருவார் பூம்பதத்தாய்!
கணிப்பில் குணமார் மாமுனிவ!
திருவே முகிழ்த்த செங்கனிவாய்
சிவனும் முத்தந் தருகவே
செழுந்தண் கருணைச் சிவயோகச்
செல்வா! முத்தந் தருகவே. 6

(வேறு)

வடிவு சிவனென யாவு
மயர்வறக் காணுமோர்
மனசி லெழுமறி வாக
வுளனவ னென்றலாற்
கடவு ளிவனெனக் காட்டும்
நிலைமையு முண்டுகொல்!
கருதி யவனையோர் பாதி
யுலகெனக் கொள்ளலே
அடிய ரெவருமே யாதி
முதலவ னுனவன்
அவனி முழுவது மாய
வொருவனே யென்றனர்
படிவ மிறைவற்கு வேறு
முளதுகொல்? என்றவென்
பரம குருசிவ ஞானி
பணிமணி முத்தமே. 7

பயம தெதுவுமே பாரி
லிலதெனப் பண்ணுவோய்!
பகரி லெமக்கொரு கேடு
மிலதெனப் பன்னுவோய்!
நயமி தறிகுதி; சாவு
மெமக்கிலை யென்னுவோய்
நலமு மடைகுவஞ் சாவின்
முடிவிலும் வாழ்குவம்
கயமை யகலவே கண்ணைத்
திறந்துசெஞ் ஞாயிறைக்
கருதி வெயிலினைக் காணுமப்
பரிதியுந் தோன்றுநாள்
மயல திலதெனச் சொல்ல
முடியுமோ? என்னுவோய்
மகிழ வருசிவ ஞானி
பணிமணி முத்தமே. 8

புதுமை யெதுவுமே யாண்டு
மிலதெனச் சொல்லுவோய்!
புவனி முழுவதும் ஆட்சி
நமதெனக் கொள்ளுவோய்!
அதிர வெவருமே யாற்றும்
வணக்கத்தின் நன்மணம்
அயலிற் பரவவே யாற்றி
யுயருதி யென்னுவோய்!

துதியொ டுடல்பொரு ளாவி
கொடுதமி யற்குமா
சுருதி முடிவுறு தூய
பொருளுத வுற்றகூன்
மதியின் முடிமதி யாள!
மருவியி ரக்கிறேன்
மகிழ வருசிவ ஞானி
பணிமணி முத்தமே. 9

இழப்ப தெதுவுமிங் கில்லை
யடைவது மில்லையே
எனக்க ழறுமோ ரின்ப
வடிவமார் குன்றமே!
வழக்க முறவிரு ஞாலம்
புகழுமோர் போர்வையால்
நமக்கு மருள்புரி ஞானம்
பெருகுமோர் வாரிதி
சழக்க தொழியநற் றூழ்மை
யுளமுடன் வாழ்த்துவோர்
தமக்கின் னருள்புரி நேச!
தயாநிதி யோகனே!
ஒழுக்க மெனவொரு தோற்ற
முறுமுனி முத்தமே.
உயர்வு தருசிவ ஞானி
பணிமணி முத்தமே. 10

முத்தப்பருவம் முற்றிற்று

——

## 6. *வருகைப் பருவம்

கருவாய் வழியைக் கடக்கவொரு
புணையா யெழுந்த கதிரொளியே!
கரவி லுளத்துப் பெருந்தொண்டர்
கருதி வழிபா டுஞற்றிடவே
திருமா மறையு மாகமமுந்
தெருட்டு பொருளே யிதுவென்று
தெளியக் குறித்துக் காட்டிவரு
தியக்க மகலச் செய்துதுயர்
மருவா தொழித்து மலந்தீர்க்க
மணிவாய் மலர்ந்த பெருங்கருணை
வடிவே! பெரும! சிவயோக
வள்ளால்! அடியேற் கருள்கனியுங்
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளும்
குலமா மணியே! வருகவே. 1

---

*அஃதாவது குழந்தையை வருகவென்று தாயர் அழைக்குங் கூற்றாகப் பாடும் பருவம். இது பன்னிரண்டாம் மாசத்திற் கூறப்படுவது. பதின்மூன்றாம் மாசத்திற் கூறப்படுவது என்பாரு முளர். இதனை வாரானைப்பருவம் என வழங்குவதும் உண்டு. வாரானை—வருகை. ஆனை தொழிற்பெயர் விகுதி.

கருவி யுடலென் றிவையினையே
கருத்திற் பெரிதா மதித்துலகாங்
கடலின் மயங்கித் தமவென்னுங்
கசடே யுடையா ரிவரென்றும்,
விரவும் வெகுளிக் கனலினுக்கு
விறகாம் இவர்தம் மனமென்றும்,
விளியாக் காம மதுவுண்டு
மிகவே செருக்கு மிவரென்றும்,
அரிதாந் தமையுந் தலைவனையும்
அறியாக் கயவ ரிவரென்றும்,
அடியேந் தமையும் புறக்கணித்திங்
கருளோய்! வாரா தொழியற்க;
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளுங்
குலமா மணியே! வருகவே. 2

அருஞ்செந் தமிழாற் றுதிசெய்த
அருநா வலனர் சுந்தரனர்
அழைத்தே யனுப்ப வவர்க்காக
அணியார் திருவா ரூர்நகரின்
திருமா மறுகில் ஓரிரவில்
திரும்பித் திரும்பிச் செந்தளிர்நேர்
திருவா ரடிகள் சிவக்கமுனட்
சிலைக்கூன் புருவத் தரளநகைப்

பரவைப் பெயராள் திருமனைக்குப்
பரமன் நடந்து வருவானேல்
பரமா! உனையின் றழைக்கின்றோம்;
வந்தால் நினக்குப் பழியுண்டோ?
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளுங்
குலமா மணியே! வருகவே. 3

கருவைக் களையும் நின்பெருஞ்சீர்
கழறுஞ் செந்நாக் காசினியிற்
கசடர் பெருமை கழறுமற்
கனிந்து நின்பாற் பற்றுமுளந்
திருவில் மறுபற் றுஞற்றமல்
தெரிசித் திருகண் பிறபொருளைத்
திரும்பிக் களித்துப் பாராதுன்
திருச்சொற் கேட்ட செவிபிறசொற்
பருகித் திளையா திருபெரும்பூம்
பசுந்தாட் குற்ற பணிபுரியும்
படியே யமைத்து நினையுணரும்
பரிசே பெருகப் பரிந்தளிப்பாய்
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளுங்
குலமா மணியே! வருகவே. 4

அரிவைப் புணர்ப்பே பேரின்பம்;
அரிதாங் கந்த மைந்துமுடன்
அடைடவே கெடுதல் பேரின்பம்;
அறையா நின்ற குணமூன்றும்
அருகி யொழித லேயின்பம்;
அருமா வினைக ளறுதலின்பம்;
அருவாம் மலம தறலின்பம்;
அறிவாம் ஞானந் தனியின்பம்;
மருவு முயிர்தான் கெடுதலின்பம்;
மகிழுஞ் சித்தி யின்பமென
மலைந்தே பலருங் கலகமிட
வருமோ ரின்பம் இதுவென்போய்!
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளுங்
குலமா மணியே! வருகவே. 5

உரவோய் வருக; அடியேம்
உரைத்துப் புகழ வருக; நகை
யொளியே பரவ வருக; வுடை
யணிய வருக; நறியமலர்
சிரமீ தணிய வருக; நின தடியார்
சிரத்திற் றிளைக்கப்பூந்
திருத்தாள் பதிக்க வருக; மயல்
துரக்க வருக; வருண்மாரி

தரவே வருக; கூற்றுவலி தகைக்க
வருக; வெமதுளத்திற்
றருக்கோ டிருக்க வறிவுருவில்
தழைக்க வருக;வுயர்
குருமா மணியே! மாவைப்பேர்
குலவூர் மணியே! வருகவே
கொழும்புத் துறையிற் கோயில்கொளுங்
குலமா மணியே! வருகவே. 6

(வேறு)

கலைகள் பலவு முணரு பவரு
மறிய வரிய பெரியனே!
கனிவு கொளவுள் ளுருகு மடிய
ரவர்த மகமும் முகமுமே
மலர வருக; கமல வதன
மொழுகு கருணை வடிவனே!
வளரு முனது புகழை நிகரு
நிலவு பொழியு நகையனே!
நலமொர் சிறிது மிலனு மெனையு
மருளு மொளியின் நிலயமே!
நளின மனைய பதமே தரவே
வருக; வரிய பிரமமே!
மலையை நிகரு மெமது குரவ!
வருக பெரும! வருகவே
வளமை பெறுமொர் பழைய கொழும்புத்
துறையில் முனிவ! வருகவே. 7

இயலும் நடையும் வடிவும் அழகும்
எவரும் எழுத வரியனே!
எமது மனமும் உலகும் மகிழ
எழுமொ ரமுத கிரணமே!
பயிலுந் தமிழில் அரிய நினைவைப்
பலரு முணரத் தருபவ!
பழைய நலூரில் முனிவன் பெருமை
முழுது முணர மொழிபவ!
எயிறு தெரிய வறிஞர் நகவே
எனையு மடிமை பெறுபவ!
எனது சிறிய மதியி னெழுமோர்
புலிய சொலையு மருள்பவ!
மயில்கள் குயில்கள் பயிலு மினிய
தருவே மலியு நறியகா
வளமை பெறுமோர் பழைய கொழும்புத்
துறையில் முனிவ! வருகவே, 8

தகர விளையாட் டயரு மொருவ!
சரண கமலந் தருபவ!
தமிய னெனையு மடியை மறவாத்
தகைமை யளித்திங் கருள்பவ!
அகர வுயிரே யனைய பரிபூ
ரணனுங் குரவ பரமனே!
அரிய திமிர[1] மகல வருமோர்
அரனே! யருள்செய் தினகர![2]

1. திமிரம்-இருள்; 2. தினகர-ஞாயிறே.

சகல ரெமது மலம தகல
வடிவு பெறுமொர் குருமணி!
சகல வுயிருஞ் சுகம துறவே
பெரிய கருணை புரிபவ!
மகர மலியுங் கடலி னருகே
யலைகள் நிதமு மொலிசெயும்
வளமை பெறுமொர் பழைய கொழும்புத்
துறையில் முனிவ! வருகவே. 9

நிறைவு பெருகும் மனமுந் தனமு
நினதா ரினமும் அளிப்பவ!
நினது கருணைப் பெருக்கை நினைவு
பெறவே யுளமுங் களிக்குமே
உறவுந் தகவும் நலனு மறிவு
முருகு முளமுந் தருகுவோய்!
உலகில் நலனு ரெவையு முனையே
துதிசெ யுரையு மருளுவோய்!
இறைவ! பகழி புரையு மகளிர்
நயன வலையை யறுத்தவ!
எழிலே யொழுகு மரியே றெனவே
யெவரு நடுங்க நடப்பவ!
மறையு மறியா வொருவ! குரவ!
மருவு சடையொ டெழுந்தருள்
வளமை பெறுமொர் பழைய கொழும்புத்
துறையில் முனிவ! வருகவே. 10

வருகைப் பருவம் முற்றிற்று

# 7. *அம்புலிப் பருவம்

மதியோன் எனப்படுவை; யெங்கள்மன்
இவ்வுலகின் நிலையாமை யறியுமதியோன்;
வளர்சாந்த னெனப்பெறுவை; எங்கள்கோன்
உள்ளுளே மருவுமுப சாந்தனுவன்;
நதியணி சம்பு[1]வோ டுறைவைநீ; நம்மண்ணல்
சம்புவிட் டகலாதவன்;
ஞாலவிரு ளகற்றுவை; நங்குழவி நம்பினோர்
அகவிரு ளகற்றுவன்காண்;
பதிபெயர்ந் தோயாது பாரினைச் சுற்றுவை;
யெம்மிறையும் பார்சுற்றுவன்;
பலருனை வழிபடுவர்; பரணிவன் றன்னையும்
பல்லோரும் வழிபடுவரே;

---

*அஃதாவது பாட்டுடைத் தலைவனாகிய குழவியோடு விளையாட வருக வென்று தாயர் சந்திரனைச் சாம, பேத, தான தண்டங்கூறி யழைக்கும் பருவமாம். (அம்புலி—சந்திரன்.) இது பதினன்காம் பதினைந்தாம் மாசங்களிற் கூறப்படுவது. பதினெட்டாம் மாசத்திற்குரியது என்பாருமுளர்.

காப்புப்பருவம் முதல் அம்புலிப்பருவம் ஈறுகவுள்ள ஏழு பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்னும் இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொது வானவை. மேல்வரும் சிற்றிற்பருவம், சிறுபறைப்பருவம், சிறுதேர்ப்பருவம் என்பவை ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கு மட்டுமே உரியவை. பெண்பாற்பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவம், நீராடற்பருவம், ஊசற்பருவம் என்பன கூறப் படும்.

1. சம்பு - சிவன்.

அதிமதுர வுபதேச வமுதளிப் பவனை நீ
யொருபுடை யொப்புவைகாண்
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுடன் அம்புலீ! யாடவாவே 1

கமலமெல் லாங்குவி கரத்தினை[1]; எங்குரவன்
மெய்யன்பர் குவிகரத்தன்[2];
கவின்சாலி[3] யொடுபொலிய விழைகுவை;
யெஞ்செல்வன் கதிர்ச்சாலி[4] விளைவுசெய்வன்;
விமலனொரு விழியாக விளங்குவை; யெங்குழவி
விமலனைக் காணும்விழியோன்;
மிகவுலகி லுயிர்கள்பல வோம்புவை; சிவஞானி
எவ்வுயிரு மோம்பிநிற்பன்;
தமர்பிற ரென்னாத தண்ணளிப் பெருமானைத்
தண்மதி! நிகராதிராய்;
தகைமையுட னினையவன் தன்னுட னுடவே
தானழைத் தருளுகின்றான்;
அமலனுயர் கருணையே வடிவுகொள் சற்குணன்
அம்புலீ! ஆடவாவே
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுட னம்புலீ! யாடவாவே. 2

---

1. கரத்தினை - கிரணங்களையுடையை. 2. கரம் — கை.
3. சாலி—அருந்ததி நட்சத்திரம். 4. சாலி—நெற்பயிர்.

இரவோன்[1] எனப்பெறுவை நீ;யிவன்
எஞ்ஞான்றும் இரவோருக் குதவுசீலன்
எண்ணிரண் டாங்கலைக ளுடையை;யிவன்
கலைகளோர் எண்ணெட்டு மேகடந்தோன்;
மருவுபெரு மறுவுண்டு நின்றனக்;
கிவனுக்கோர் மறுவென்ப தில்லைகண்டாய்
வளர்குழவி யிற்றெழுவ தற்குரியை நீ;நிதம்
வணங்குதற் குரியனிவன்;
விரவுபெண் மயலுடைப் போகிநீ; இவன்மயலை
மேவாத பரமயோகி;
விள்ளாது தாமரை குவிக்குவை; யிவனன்பர்
இதயதா மரைவிரிப்பன்;
அரவணியு மிறையினை யடைவிப்ப னிவனுடன்
அம்புலீ! யாடவாவே
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுட னம்புலீ! யாடவாவே. 3

மன்னிருட் போதுபுற விருளன்றி யகவிருள்
மாற்றுமோர் வகையையறியாய்;
மாவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனங்க
ளனைத்தினும் மலர்வதோராய்;
பன்னுசெங் குமுதமலர் திறப்பதல் லாலன்பர்
அகமலர் திறக்கவறியாய்;
மாதவஞ் செய்தனைகொல்! மதியமே!
யுன்றனை மதித்தழைத் தருளினன்காண்

1. இரவோன் – யாசிப்போன்; இரவு–யாசகம்; இராத்திரிக்குடையோன் என்பது இயற்கைப் பொருள்.

முன்னுளி லரவினது வெவ்விடப் பகுவாயின்
முன்சென்று பட்டுலைந்தாய்;
முதல்வனுஞ் சிவனையே யிகழ்தக்கன்
வேள்வியின் முன்பல் லிழந்தவன்[1]பின்
அன்பினுற் சென்றடைந் துறுவது மென்பயன்
அம்புலீ! யாடவாவே
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுட னம்புலீ! யாடவாவே. 4

தேய்குவை; வளருவை; தேவருன் கலைகளைத்
தினமுமோ ரொருவராகச்
சிதறிப் பறித்துண்ப; ரருளிலர் ஆதலாற்
சிறியகய ரோகியாகி
நோயுடன் நீதிரித லின்றியே யருளுடன்
நீக்கியாட் கொள்ளுவன்காண்
நினையவன் இங்கழைத் திடவுமொரு
மனிதனென நீவரா தொழிந்திடாதே
ஏயவிங் கிவனிடத் தெய்தினு லிகழாமல்
மனிதரைத் தனதருளினுல்
ஏன்றுகொண் டுய்வுதரும் இன்பவடி வினனறிக
எங்கள்சிவ யோகநாதன்;
ஆயநின் பகைபுகா அரணிவன்; சரணிவன்;
அம்புலீ! யாடவாவே
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுட னம்புலீ! யாடவாவே. 5

---

1. தக்கன் வேள்வியிற் பல்லிழந்தவன் – சூரியன்;

உருஷிய ரமெரிக்க ருணேயடைய வழியெலாஞ்
சூழ்ந்துநின் றுஞற்றுகின்றார்;
உன்னிடம் ஓயாது விண்வெளிக் கப்பல்களி
னுறுதூது மனுப்புகின்றார்;
பரபரப் புடனவர் பற்றவிட் டடிமையாய்ப்
பாருளோர் கைப்படும்முன்
பனிமதி! யெங்கள்சிவ ஞானியை
யடைவையேற் பகரரிய புகழுமுண்டாம்;
ஒருவனுக் கடிமையே யாமன்றி யுலகினிற்
சிறியருக் கடிமையாகாய்;
ஓங்குபே ரின்பமுங் கைகூடும்; ஒண்புலவர்
தமிழமுது முணக்கிடைக்கும்;
அருவமா யுள்ளவன் உருவமாய் வந்துனே
அழைக்கிரு னுடவாவே
அருட்பெருக் கொழுகுவிழி யுடையசிவ
யோகியுட னம்புலீ! யாடவாவே 6

(வேறு)

மண்ட லத்துறுந ரெண்டி சைக்குரியர்
மாத ராடவர் வருவரால்
வந்து சந்நிதியில் வாழ்வு பெற்றுடையர்
மாணில்[1] பையுளுந்[2] தவிர்வரால்
பண்டு பற்றியுள பாழ்ம லப்பிணியும்
பாறச் செய்குவன் வருதியேல்
பாவை ரோகிணியின் மீது காதலுறு
பாவ மாம்பழி யகற்றலாம்

1. மாணில் - மாட்சிமையில்லாத
2. பையுள் - துன்பம்

மிண்டு கூனிநெடு வேறு தீமைகளும்
வீட்ட லாம்புக ழடையலாம்;
மேனி மீதிலுயர் நீறு பூசியவன்
மேவு மின்னருள் படியலாம்;
அண்டர் வந்துதொழு மண்ணல் நோக்குதிருப்
பார்வை யொன்றுமே அமையுமே
ஆசி லாதசிவ யோக நாதனுட
னுட வம்புலி வருகவே. 7

பூத லத்துனது பாவ மோடுபழி
போத வும்[1]பலர் உரைப்பரால்
புங்க வர்க்குரிய மந்தி ரிக்குரவன்[2]
தன்னை நீபிழைத் தனைமுனம்;
ஓது தக்கனெனும் மாமன் தந்தபெருஞ்
சாப முற்றனை யென்பரால்;
உண்மை யானவிளங் காலத் தேநரையுங்
கூனு டன்திரை யுறுதியால்
ஆத பன்[3]றனது கைக ளாங்கிரண
மிச்சில் நள்ளிருளில் மிசைகுவாய்[4]
ஆக விவ்வகையி லான தீப்பழிகள்
போக வேண்டிடில் அடைகுதி;
மாத வன்னிவனு மோகை யாலருளும்;
ஆட வம்புலி வருகவே
மாசி லாதசிவ யோக நாதனுட
னுட வம்புலி வருகவே. 8

1. போதவும்-மிகவும்; 2. புங்கவர்க்குரிய மந்திரிக்குரவன்-பிருகஸ்பதி; 3. ஆதவன்-சூரியன்; சந்திரன் சூரியனிடத்திருந்து பெற்று ஒளியை வீசுகின்றனுதலின் இங்ஙனம் கூறப்பெற்றது.

வீடு பெற்றுயலாம் மேன்மை பற்பலவும்
எய்த லாம்முயற் களங்கமும்
வீட்டி ஞாயிறது முன்னர்ச் செல்லுமொரு
வீறு கொண்டொளிர் வலிமையும்
மாடு[1] பெற்றுயரும் வன்மை யும்பெறலாம்
வாய்மை மேவுதல் சரதமாம்;
மாண்பு சேருடலின் வன்மை யோடுசுக
வாழ்வு பெற்றினி துறையலாம்;
பாடு பட்டுழலுந் தீயவெம்பிணிகள்
பாற்ற லாம்பவம் அகற்றலாம்;
பண்டு நீயடையும் புன்மை யாவையுமே
போக்க லாமருள் பெறலுமாம்;
ஆடு தற்கிவனு மோகை யாலருளும்;
ஆட வம்புலி வருகவே
ஆசி லாதசிவ யோக நாதனுட
னுட வம்புலி வருகவே. 9

மாத வன்னருளிற் கூய மைத்தமொழி
நீம தித்துடன் வருகவே
வந்தி லானெனவே சிந்தை யிற்கறுவி
யேசி வந்திடின் நலமல;
போது தற்கிவனே நாணும் விஞ்சிடுக
ளங்க முற்றனன் சசி[2]யெனப்

1. மாடு - செல்வம்.
2. சசி - சந்திரன்.

புந்தி கொண்டுபுகல் வார்த்தை யாலிவனுஞ்
சீற்ற மேதவிர்ந் துறைகிருன்;
வீத லுற்றிடுவை சீறி னங்குழவி;
நிச்ச யம்மிது வறிகுதி;
மேயி னேனுடனே மேயி னேனெனவே
மேவி ஞலுயல் பெறுகுதி;
ஆத லாலிவனு மோகை யாலருளும்;
ஆட வம்புலி வருகவே
ஆசி லாதசிவ யோக நாதனுட
ளுட வம்புலி வருகவே. 10

அம்புலிப் பருவம் முற்றிற்று

## 8. *சிற்றிற் பருவம்

படியிற் றிருவீ தியினெருசார்
பகர்நித் திலங்கள் கொடுசிற்றில்
பண்ணுஞ் செயலில் அறிவுசெலும்
பராக்கால் நினது வரவுணரா
தடியேம் இருக்கை யெழாதிருந்தேம்;
அறிந்து தருக்கி யிருந்திலங்காண்;
அண்ணல்! அதனை யுட்கொண்டிங்
கமையாப் பகைபா ராட்டனன்றோ?
முடியும் பணியு மணிமன்னர்
முதலாம் முதல்வர் முன்னின்றே
முகமு மகமும் மிகமலர
முடிமீ தணியும் நினதுதிரு
வடியிற் புழுதி படும்வண்ணம்
அடியேஞ் சிற்றில் சிதையேலே
அழியாப் பெருமைச் சிவயோக
அரசே! சிற்றில் சிதையேலே. 1

---

*அஃதாவது சிற்றில் இழைக்குஞ் சிறுமிகள் தஞ்சிற்றிலைச் சிதைக்கவேண்டாமென்று பாட்டுடைக் குழவியை வேண்டும் பருவம். இஃது இரண்டாம் ஆண்டிற் கூறப்படுவது: குழந்தையின் பதினாறும் பதினேழாம் மாசங்களுக்குரியது என்பாரும் உளர்.

பழிக்குங் கொடிய செயலாளர்
பதுங்கி யிருக்கும் பாழறையோ?
படிற்று வடிவங் கொளுமவர்கள்
பரிவிற் கலந்தே யுறைமனையோ?
ஒழிக்குந் திறத்தி னருகர்முதல்
ஒவ்வாச் சமயத் தவர்கூடி
யுறையு மிலமோ? யாம்விரும்பி
யுவந்திங் குஞற்றுஞ் சிறுவீடு;
தெழிக்குங் குரலிற் றெருட்டுமொரு
சிறுவா! அடலே றனையவனே!
திருவார் பெரும! சிறியேங்கள்
சிந்தித் திழைத்த சிறுவீட்டை
அழித்தல் நினக்குப் புகழ்தருமோ?
அடியேஞ் சிற்றில் சிதையேலே
அழியாப் பெருமைச் சிவயோக
அரசே! சிற்றில் சிதையேலே. 2

அழிக்க நினைப்பிங் குளதாயின்
அடங்காப் பெரிய கொடுஞ்சினத்தை
அழிக்க; கடல்போற் பெருகாசை
அழிக்க; அடியேம் மனச்செருக்கை
அழிக்க; கொலையை அஞ்சாமை
அழுக்கா றவலப் பெரும்பிணிகள்
அழிக்க; வினைகள் மூன்றினையும்
அழிக்க; வடியேம் வறுமையினை

அழிக்க; வுடலை நிலையென்னும்
அறியா வுளத்தை, இருண்மலத்தை
அழிக்க; பெரும! புலன்வழியே
அடையுஞ் சிறுமைக் குணமதனை
அழிக்க; புழுதி கொடுசமைத்த
அடியேஞ் சிற்றில் சிதையேலே
அழியாப் பெருமைச் சிவயோக
அரசே! சிற்றில் சிதையேலே. 3

விழிக்கு விருந்தாம் வியனுலகம்
விதியாற் படைத்த லயன்தொழிலாம்;
விதியாற் படைக்கு மவையெல்லாம்;
விளைந்து சிறந்து பெருகுவளங்
கொழிக்க வளித்தல் கொழுந்திகிரிப்
படையும் வளையுங் கொடுநின்ற
குளிர்மா முகிலின் நிறம்படைத்துக்
குலவு மழகன் தொழில்கண்டீர்;
அழித்த லெமக்குத் தொழிலென்றே
அரசே! யெமக்கிங் கறைவீரேல்
அடுபோர்ப் பனைக்கைக் களிற்றுரியும்
அரவும் பிறையும் அடர்த்துலகை
அழிக்க வருகங் கையுமெங்கே?
அடியேஞ் சிற்றில் சிதையேலே
அழியாப் பெருமைச் சிவயோக
ஐயா! சிற்றில் சிதையேலே. 4

ஏரால் நிலத்தை யுழுமதுவே
இயல்பும் புகழு முடைத்தாகும்;
இதற்கு முரணுக் காலாலே
நிலத்தை யுழுத லியல்பாமோ?
சீரார் அரிய திருவடிகள்
செறிந்து புழுதி யடையாவோ?
செழுந்தேன் மலர்கள் படியுமவை
இவற்றிற் படிதல் சிறப்பாமோ?
பாரோர் இதனைப் பொறுப்பாரோ?
பயந்தாள் நயனத் துறுத்தவிவை
பதும வடியி லுறுத்தனன்றோ?
பரமா! புலமாங் களிறடக்கும்
வீரா! இலங்கை வளநாடா!
மெலியேஞ் சிற்றில் சிதையேலே
வியக்கும் பெருமைச் சிவயோக
விறலோய்! சிற்றில் சிதையேலே. 5

அடைதற் கரிய தவப்பிறப்பை
அடைந்து நலூரிற் செல்லப்ப
வருமைப் பெருமைக் குரவனையும்
அணைந்து கிடைத்தற் கரியசொலும்
அடைவே கிடைத்திவ் வவனியெலாம்
அவமே யலைந்து திரியாமல்
அசைவற் றொருவன் திருத்தாளை
யகத்தே பதித்து வீற்றிருந்து

அடைவோர் துயரு மகவிருளு
மகற்று மொருசூ ளாமணியாய்
அடியேற் கருள்சிந் தாமணியாய்
அமைந்தாற் பிறைநன் னுதலார்செய்
குடிசை சிதைக்கக் கருதுவதோ?
குரவா! சிற்றில் சிதையேலே
குறையாப் பெருமைச் சிவயோகக்
குரிசில்! சிற்றில் சிதையேலே. 6

வேறு

செல்லுதுமெ னச்சொலுமோர்
செல்வமதை நிற்குஞ்
செல்வமெனக் கூறுமொரு
சீர்த்தியது போல
நில்லரிய புல்லியவிப்
பொய்யுடலை மெய்யா
நீடுலகிற் பேசுமொரு
நீர்மையது மான
இல்லெனவே சொல்லெமது
சிற்றில்சிதை யேலே
இவ்வுலகி லன்பர்துய
ரல்லதுவே றேதுஞ்
செல்லமுனி யாதவ!வெஞ்
சிற்றில்சிதை யேலே
செல்வ!சிவ யோகமுனி!
சிற்றில்சிதை யேலே. 7

தொல்லுலகம் யாவுமெம
தாகும்;உள மக்கள்
சொல்லினெம துற்றவரே;
யாரிடத்து மன்பு
நல்லபடி யோங்கவினை
யாற்றுதுநாம்; எங்கே
நாடினுமவ் வீசனல
தொன்றையுமே காணேம்;
செல்வருடன் நல்குரவோர்
சிட்டர்களுந் துட்டச்
சேட்டைசெயும் பூரியருஞ்
சீர்ச்சிவம தாமே;
எல்லவரும் அண்ணலவன்
செய்கைபுரி வோரே
என்றருள்செய் யோகமுனி
சிற்றில்சிதை யேலே. 8

பொல்லாப்பிங் கொன்றுமிலை;
யாமதனை யறியோம்;
புந்தியது கொள்ளல;மெப்
போதோவா யிற்றே;
எல்லாமிங் குண்மையென
வோதுமுனி ஞான
இன்னுரையை வன்னவகை
கொள்ளவெழில் மேவக்

கல்லாதார் கற்றவர்கள்
உள்ளபடி காணக்
கல்லுமுரு கும்வகையிற்
சொல்லுமொரு மேலோய்!
செல்லரிய வுண்மைவழி
செல்லவழி காட்டுஞ்
செல்வ!சிவ யோகமுனி
சிற்றில்சிதை யேலே. 9

நொய்யரிசி பெய்தபுளி
யம்பழம தோட்டை
நோன்மணியி னுலிழைத்த
நுண்ணடுப்பி லேற்றிப்
பொய்யான விந்தனத்திற்
குன்றியெரி கூட்டிப்
பொங்கிளநீ ரானமைந்த
புல்லுலையை மூட்டிக்
கையாலே பொன்தரளம்
பூக்களினு லாய
கற்கறிக ளாக்கிமகிழ்
சிற்றில்சிதை யேலே
செய்யநின கால்களினுற்
சிற்றில்சிதை யேலே
செல்வ!சிவ யோகமுனி
சிற்றில்சிதை யேலே. 10

சிற்றிற் பருவம் முற்றிற்று.

## 9. *சிறுபறைப் பருவம்

நசைதரும் அறிவுநிதி நாம்பெறப் பல்லூழி
நவிலருந் தவமுயன்றோம்;
நலமுறும் பொருளதுவு நாமிகத் துய்க்கவிது
நலசமய மெனுமுழக்கும்,
குசைநுனி யனையவொண் ணுண்ணறிவு
கொள்ளன்பர் குழாம்சுருதி யாகமங்கள்
குறைவறக் கருதியுரை கொண்டிறையை
யேத்துமொழி குதுகலித் திடுமுழக்கும்,
அசைவுகொள் மனத்திலெழு காமாதி தீயவிய
அணுவதாம் மலமுமழிய
அடர்த்துவரு மருள்முகிற் கூட்டத்தி
னும்முழக்கும் அலைமலை நதிவளங்கள்
திசையெலாம் பரவுமிசை சேரீழ வளநாட!
சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 1

---

*அஃதாவது பாட்டுடைக்குழவியைச் சிறுபறை கொட்டும்படி வேண்டும் பருவமாம். இது மூன்றும் ஆண்டிற் கூறப்படுவது. இதனைப் பதினெட்டாம் பத்தொன்பதாம் மாசங்களுக்குரியது என்பாருமுளர். சிற்றிற் பருவத்தை ஒன்பதாம் பருவமாகவும் இதனை 8-ம் பருவமாகவும் கொண்டாரும் உளர்.

வந்துலகிற் கடவுளர்க ளாயுளோர் வாழ்த்தவே
மணிமன்றுள் நடமாடுமா
மணியெங்கள் பெருமானை வாழ்த்தாதோர்
சீர்குலைய வருமுரசப் பறையென்னவும்,
சிந்தையா குலம்விளை காமமொடு கோபமெனுஞ்
செருக்குமிகு புலிகளுக்கும்
திகைப்பித்து மருளைவிளை யாணவத் தீயிருட்கும்
தெழிக்குமொரு பறையென்னவும்,
எந்தையார் திருவடியை எஞ்ஞான்றும்
ஏத்தும்உன் இடையறு வடியவர்க்கே
இடராக வருவறுமை முதலான பாம்பினுக்கோர்
இடியதாம் பறையென்னவும்,
செந்தளிரை எழில்வென்ற நின்றிருக் கையினாற்
சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 2

நித்தியர் அழியாத நீர்மையர் நா,மென்றுமே
நினைக்குக சிவனை,யென
நினைப்பிக்கு முகமாக நேர்நின்று சொல்வதேபோல்
நிறைதமிழ்க் கவிபாடினாய்
புத்திதான் தருங்கவி பொற்புநிறை தீர்த்தங்கள்
பொருவவுட் புனிதநிலையும்
பொருந்தவே தருங்கவி புன்மைகள் நீக்கியென்றும்
புவியதனில் ஓதுநர்க்குப்

பத்திதான் தருங்கவி பற்றுடைய வன்பினர்க்குப்
பரமமெய் யறிவருளிப்
பகரரிய விடுதலையைப் பாலிக்க வல்லகவி
பரமவருட் கவிதந்தனே
சித்திமுழு துடையவ! சீரியோய்! செங்கரத்தால்
சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 3

முக்கணெண் புயத்தெங்கள் தெய்வமே மேலான
முழுமுதற் கடவுளென்றும்
முகிழ்பெருங் கருணைபொழி மூர்த்தியவ
னன்பரே முதலிடத் துறவரென்றும்
பக்குவ முதிர்ச்சியிற் பாரினுயிர் வர்க்கங்கள்
படிமுறை கடைத்தேறவே
பரவுதனி நடநவில் பண்ணவன் ஐந்தெழுத்துப்
பரமமறை மனுவதென்றும்
மிக்கதீ வெகுளியை நீக்குமொரு நற்செயல்
மிகநல்ல தவமதென்றும்
விடயப் பகைவெலும் வீரமே வீரமது
மிகுமறிஞர் செயலதென்றும்
திக்குகள் தொறுமுழக் கஞ்செய்வை!
செங்கரத்தால் சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 4

சரியையொடு கிரியைபுரி தண்ணெனும் அன்புவிரி
தகவுசா லடியவர்க்குத்
தழைத்தெழும் புலரியினில் தம்பிரான்
சீர்த்தளிகள் தருசங்கின் முழக்கென்னவும்
பெரியதொரு சிவயோகச் செல்வரா
யுள்ளவர்க்குப் பிறங்கவுள் ளெழுமினிய
பெரும்பேரி படகமொடு பெட்புமிகு
சங்கிவைகள் பெருகுமிய முழக்கென்னவும்
அரியசிவ னடிஞானங் கைவரப் பெற்றவர்க்கங்
கறிவிலெழு முழக்கென்னவும்
அருள்பெருக விருளிரிய வாண்டகை !
நீசொலும் அறிவுரை முழக்கென்னவும்
தெரியுமறை முழக்கெனவுஞ் செல்வநின்
சீர்க்கரத்தால் சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 5

ஒளிபெருக வெழுமிரவி மட்கவொளி தந்தமணி
முடியுடைச் சதமகனும்
உறவான விமையவரும் உண்மகிழ்ந் தின்பமுற
ஒருபுறத் திருகுழையு
மிளிரவரு செவியளவு மோடுசேற் கண்ணுடைய
வெறிமலர்ப் பதமகளிர்
வியனடம் புரிந்துவர விஞ்சுமெய்ச் செஞ்சுவைத்
தமிழ்ப்பனுவல் அளியினெடு

குளிர்தூங்க வியற்றிமகிழ் கோதில்சீர்ப்
பாவாணர் குழைந்துநின் றுனைப்பாடவே
குரைகழல் வழுத்தவரு மன்பர்முனி
புங்கவர்கள் குதுகலித் தருகுவரவே
தெளிமறை முழக்கவரு சீரியோய்! செங்கரத்தால்
சிறுபறை முழக்கியருளே
செந்தமிழி னின்பமலி சந்தயாழ்ப் பாணமுனி
சிறுபறை முழக்கியருளே. 6

(வேறு)

மாமணி புரையும் மரபிற் பொலியும்
மாதவ யோகமுனி!
மாமறை தருமொரு வளனுர் பொருளே!
மாலற நேயமுடன்
தோமறு மடியர் துதிக்குங் களிறே!
சோதியி னுர்வடிவே!
தொல்லுல கறியச் சுருதிப் பொருளைச்
சொல்லுதற் கேயுமொரு
மாமனு வெனவே வருமொரு திருவே!
வள்ளலே! யன்பருள
மாமலர் விரியும் வளமார் மணமே!
மற்றத னின்சுவையே!
கோமகன்! எமது கூரிரு ளகலக்
கொட்டுக சிறுபறையே
குரவா! கொழும்புத் துறைசேர் ஒருவா!
கொட்டுக சிறுபறையே. 7

சீயார் உதிர நரம்பு மெலும்புஞ்
சேர்தசை தோல்மூளை
செப்பு மிவைகள் செறிய நரியுந்
தேர்கழு குந்நாயும்
ஏயே நமதென் றிறும்பூ தடையு
மித்தகை நாறுடலும்,
எம்மை விடாது துரக்கும் புலனும்,
ஈர்க்கும் புன்மனமும்,
ஓயா தியங்கும் உயிர்ப்பும், பலவா
ஓதுங் குணமுமலே
உண்ணின் றுனையே யறியும் அறிவே
யுன்னையு மோர்தலெனக்
கோவா யெழுந்தே குறிக்குங் குழவீ!
கொட்டுக சிறுபறையே
குரவா! கொழும்புத் துறைசேர் ஒருவா!
கொட்டுக சிறுபறையே. 8

(வேறு)

பொருவரு மவுணர் புரிதரு
கொடுமை யகன்றோடப்
பொருளறும் வழிகளிற் புகுமன
விருளது கரந்தோடப்
பெருகி யலைத்துயிர் மறுக
வளைத்திடு மவாவோடப்
பிறரை வருத்துங் கொடியவர்
கயவர் நிலாதோடப்

பருவயி ரப்புய மறவர்
விளைத்திடு போரோடப்
பசிய செழுந்தமிழ்ப் புலவர்
வறுமை யகன்றோடத்
திருவருள் வடிவுறு பெரும!
முழக்குக சிறுபறையே
செழிய கலம்பகக் குமர!
முழக்குக சிறுபறையே. 9

உரைசெயு முலக மனைத்து
மொடுக்கி யமிழ்த்தும்நாள்
ஒலிகட லுறுதிமில்[1] எனவே
மிதக்கும் நகரின்வாய்
அருள்வடி வுறுமெம துமையவ
ளணிமுலை கறக்கும்பால்
அருளமு துணவிழைந் தழுமொரு
குழவியை நிகர்ப்போனே!
வருநகர் பலவினும் உலவி
யருண்மழை வருஷிப்போய்!
வரவர நசைமிக வுறுநகர்
தொறுமலி தவத்தருடன்
திருவடி பதிதர வருபவ!
முழக்குக சிறுபறையே
செழிய கலம்பகக் குமர!
முழக்குக சிறுபறையே. 10

1. திமில்-தோணி.

சிறுபறைப் பருவம் முற்றிற்று.

## 10. *சிறுதேர்ப் பருவம்

அருவடிவ மாகுமொரு பொருளதே யவனிவரு
மாருயிர்கள் வழிபட்டுய
வரியபுலி யதளோடு மதகரியி னதளுடுத்
தங்கைவரு சிறுகன்றுமான்
பொருமழுச் சுமையும்வெண் ணகுதலைச்
சுமையுமேற் பொங்கரவின் சுமையிலோடு
புரள்திரைக் கங்கையுஞ் சடையிடைப்
பொலிதரும் ஒழுகமுத நிலவுகாலும்
ஒருகுழவி வெண்மதிச் சுமையுமாய் வருவதாம்
எனுமுண்மை யுணர்த்துதற்கிங்
குணர்வரிய குருவடிவு கொடுவந்து னருகழைத்
துணர்விலாக் கசடனேற்குத்
திருவடிகள் புனைதற்கு வழிகோலும் அருளாள!
சிறுதே ருருட்டியருளே
சிவசமயந் தழையவரு சிவயோக நாதனே!
சிறுதே ருருட்டியருளே. 1

*அஃதாவது பாட்டுடைக் குழவியைத் தாயர் சிறுதேருருட்டும்படி வேண்டும் பருவம். இது நான்காமாண்டிற் கூறப்படுவது. இருபதாம் இருபத்தோராம் மாசங்கள் இப்பருவத்திற் குரியவை என்று கூறுவாருமுளர்.

வானத் துயர்ந்தொளிர் வடிவுபெறு பரிதியங்
கடவு[1]ளொரு தேருருட்ட
வடபுலத் திருநிதிக் கிழவன்[2]புட் பகவிமா
னப்பெயர்த் தேருருட்டக்
கானக் குழற்சசி[3] கணவன்கற் பகதருக்
காவுதவு தேருருட்ட
கடிமணப் படைமதன்[4]கவின்மிகு களியிளந்
தென்றலந் தேருருட்ட
நானத் துழாய்முடி யணிபவன்[5] நரனெனும்
அர்ச்சுனன் தேருருட்ட
நறியபூ வமர்பிரமன் சிவனேறு முலகெனு
நற்றடந் தேருருட்டத்
தேனெத் தினித்தடியன் மலவிருள் உருட்டவரு
சிறுதே ருருட்டியருளே
சிவசமயந் தழையவரு சிவயோக நாதனே!
சிறுதே ருருட்டியருளே. 2

உரையுணர் விறந்தவொரு தனிநிலைமை
யிதுவென்ன உள்ளபடி முனிவர்நால்வர்
உணருமா றுணர்த்துதற் குற்றதவ யோகநிலை
யொண்ணுதற் கடவுளாரும்
பொருமதனை விழியினு லெரித்தவொரு
செயலதாற் போந்தவொரு புகழதன்றிப்
பொருந்துதம் யோகநிலை கலைந்திடப்
பெறுவதொரு புகழின்மை யும்மடைந்தார்;

---

1. பரிதியங்கடவுள்-சூரியன். 2. இருநிதிக்கிழவன்-குபேரன். 3. சசி-இந்திராணி; அவள் கணவன் இந்திரன். 4. மதன்-மன்மதன், 5. துழாய்முடியணிபவன்-திருமால்.

ஒருகணமும் மதனன்வந்தெதிர்நிலா மதுகைசெறி
தவயோக வொழுக்கமுற்று
உணர்வரிய பொருளதாம் மறைமுடிவை
யிதுவென வுணர்த்துதவ வடிவுகொண்டு
செருவளரு முலகுளோ ருயவந்த ஞானியே!
சிறுதே ருருட்டியருளே
சிவசமயந் தழையவரு சிவயோக நாதனே!
சிறுதே ருருட்டியருளே. 3

கலகமிக் குளபுவியி லிரவுபக லெனவருங்
காலசக் கரமதுருளக்
காலமதில் முன்பினென நின்றுபுரி யிதமகித
கன்மசக் கரமுமுருளப்
பலபல பிதற்றுகண பங்கநூ லறிவெனும்
பாழுமொரு பாலினுருளப்
படிறியல் சமயவா தியர்தமிற் பசப்புவீண்
பாராட்டுப் பூசலுருளச்
சலசல வெனச்சண்டை தருமனப் பேயெனுஞ்
சத்துரு வொடுங்கியுருளச்
சதிமல விருட்படல முருளமுக் குணமுருளச்
சார்மாயை மூன்றுமுருளச்
செலுமுளத் தடியர்மிடி பிணிகலிகள் உருளவே
சிறுதே ருருட்டியருளே
சிவசமயந் தழையவரு சிவயோக நாதனே!
சிறுதே ருருட்டியருளே. 4

(வேறு)

தெங்கிளம் பிஞ்சுசிற் றீர்க்கினிற் குற்றியொண்
செய்யகொடு முடி[1]தூக்கியே
திகழவெண் டிசைவரக் கதலியந் தண்டினிற்
சிறுதுண் டெடுத்தடுத்துச்
சேணுறச் செறிவித்து நாணுறப் பிணைவித்த
சிறப்புறுங் கோட்ட[2]மதனிற்
பொங்குவேய்ங் கால்தொடுத் தின்பநற் செந்நிறப்
பூந்தா மரைப்பொகுட்டுப்
பொலனணிப் பீடமேல் அரசிலைச் சூலவேல்
புனிதமுற வேயிருத்திப்
பொற்கொன்றை நற்றும மாந்தளிர்
துகில்[3]கணி[4] பூவரச மலர்கள்சேரக்
கங்குகூந் தற்பனைக் குலையசைய வாசினிக்[5]
கார்தளிர்க் கொடிகளேற்றிக்
கவினுறப் பழமுருக் கங்குழாய் இடையிட்ட
கழிசணற் கம்பிருபுறங்
கமுகமடல் வட்டித்த சிறுசகடு மாட்டிக்
கருங்குன்றி வடமிணைத்துச்
சங்குவளை யொளிதருஞ் செங்கைகொடு புல்லியே
தமியன்மிடி பிணிகளகலத்
தகதக வெனக்குலவு தராளமார் கலம்பகச்
சதுர!சிறு தேருருட்டே
சலமதிற் பலமணிக் குலமிலங் குந்துறைச்
சாமி!சிறு தேருருட்டே. 5

1. கொடுமுடி—சிகரம். 2. கோட்டம்—கோயில். 3. துகில்-துகிற்கொடி. 4. கணி—வேங்கை. 5. ஆசினி-ஈரப்பலா.

விரவுபுவி தனின்மனிதர் வினைநுகர் வினுக்கிசைய
வேறுபல சமயநெறியும்
விளைவுதரு சோபான மெனவுயர்ந் திலகுசிவ
வேதாந்த சித்தாந்தமே
விதிவழிய நிலைதெரீஇக் கதிதருவ தாகவும்
வீணர்தம் நிலையென்றுமே
பரவுமுயர் நிலைதருவ தெனவுழறு படிறுமொழி
பாழ்படப் பரமஞானப்
பண்புதரு சிவயோக சிவகிரியை சிவசரியை
பாவனை பயிற்றிமோனப்
பகர்வில்வெளி காண்பித்து நடனநவில் பரசிவப்
பழநெறி தழைத்துவரவே
கரவுதவிர் மனசினொடு திருமுறை திருப்புகழ்கள்
கனிவமைய வோதிநாளும்
கனவுநினை வினுநினது கருணைபொழி காட்சியே
கண்டின்ப முற்றுமணி[1]யுங்
கவினீறும் எழில்தரத் திருவைந் தெழுத்தினைக்
கருதுபவர் நனிவளரவே
அரவுமலி திருமேனி யரனவன் கருணையா
லடியம்மிடி பிணிகளதிர
அழகுடன் குலவுபெரு மருள்நிலவு கலம்பகத்
தரச!சிறு தேருருட்டே
அலையதிற் பலமணிக் குலமியங் குந்துறை
ஐய!சிறு தேருருட்டே. 6

1. மணி-உருத்திராக்கமணி

(வேறு)

வம்பு லாமலர்ப் பொழிலிடை யுடைந்துகு
மாங்கனிச் சாறேடும்
வண்டு ழுங்கடி மலர்முறுக் கவிழ்ந்துபெய்
மதுப்பெயர்ப் பெருவெள்ளம்
பம்பு வான்றிரை யாணர்த்தண் புனலெனப்
பாய்ந்துமா வலிகங்கை
பரந்த பற்பல யாறே டிப்பரவை
தன்கரு நிறம்மாய்க்குஞ்
செம்பொன் ஞடுமிங் கிதற்கிலே நிகரெனச்
சீர்மிகு தலமோங்குஞ்
சிவனர் கோயில்கள் திருமுரு கன்றளி
சிவனும் பெருமைமிக
உம்பர் போற்றிசெ யீழநன் ஞட்டினன்!
உருட்டுக சிறுதேரே
உலக வாஞ்சிவ யோகமா முனிவரன்!
உருட்டுக சிறுதேரே. 7

(வேறு)

போதனை பலப்பல புரிந்துபலர் தம்மையும்
புணியவழி யொழுகவைத்தும்
புலனடங் கக்காம லோபமத மாற்சரிய
குரோதமிவை விலகியோடச்
சாதனை தனிற்சித்தி சார்ந்திடச் சிற்றின்ப
சாகரந் தாண்டியருளாற்
சதுர்விதப்பொருள்களுந் தலைவரப்பெரியர்தஞ்
சங்கமுஞ் சார்ந்துவரவே

வாதனை யெழுப்புமும் மலமாயை வலிகுன்ற
மண்பெண்பொ னுசைவதைய
மதியருக் கன்வழி யடைத்துப் பெருந்தீ
வழிப்பட்டு வாயுநிற்பத்
தாதனை வலிந்தாண்டு தாள்பதித் துப்பரம
சாந்தமதை நல்குகுரவ!
சச்சிதா னந்தசிவ யோகமா முனிவனே!
சிறுதே ருருட்டியருளே. 8

யாழ்ப்பாணர் வீரரா கவக்கவிஞ னுர்பரிசி
லேற்றயாழ்ப் பாணநாடும்
யாழ்ப்பாண நின்றுதென் னிலங்கையை நாடிச்செ
விளந்தென்ற லனிலவளமும்
வாழ்க்கைக் கியைந்தமட நாணமச் சம்பயிர்ப்
பார்ந்தமின் னுர்கள்வாயும்
மன்றலஞ் சோலைமலர் வகுளமல் லிகைமுல்லை
மணமுமழை முகிலகாழ்ப்பும்[1]
காழ்த்தியல் தருக்கள்பூ மஞ்சள்பால் தேங்காய்கள்
கலந்தேற்கு நதிகளவையும்
கைகுவித் தேத்துநர் கர்ப்பூரம் பழமுதல
காணிக்கை யோடுவாழ்த்தும்
வாழ்த்தினிற் புகழவரு பாட்டினல் லோசையும்
வண்டமிழ் மணந்தினிக்க
வருவள்ள லே!சிவ யோகமா முனிவனே!
சிறுதே ருருட்டியருளே. 9

1. காழ்ப்பும்–மிகுதியும்.

பண்புசெறி நின்னருஞ் சரித்திரப் பெருமையுஞ்
சாதனப் பண்புவாழ்வும்
பரம்பரை பரம்பரை யாகவந் தடையுநின்
பத்தரும் வாழ்வுபெறவே
நண்புசெறி நின்னினிய நவிலரும் புகழினை
நாடொறும் வளர்ப்போர்களும்
நாட்டினிற் பெருகுதவ வாழ்க்கையை
நடாத்திடும் நற்குணப் பெரியோர்களும்
மண்பிறந் தோரனைவ ரும்மனங் கசிந்துருகி
வழுத்துதற் குரியதெய்வ
மாண்புமிகு நற்சிந்தனைப்பெயர்த் திருமறையும்
மன்னுமுயர் சிவத்தொண்டனும்
ஒண்மையுட னிலவவே யுலகுய்ய வந்தருளும்
ஒருபெருங் குரவனென
உண்மைவடி வானசிவ யோகமா முனிவனே!
சிறுதே ருருட்டியருளே. 10

சிறுதேர்ப் பருவம் முற்றிற்று

சுவாமி பிள்ளைத்தமிழ் நிறைவெய்திற்று.

திருச்சிற்றம்பலம்